Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 91

வெள்ளிக்கிழமை
25 பெப்ரவரி 2022

மாசி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

## பாலின் விலையும் அதிகரிக்கின்றது

யாழ்ப்பாணம், பெப். 25
ஒருலீற்றர் பாலின் விற்பனை விலை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து 130 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (யாழ்கோ) 14

## போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், பெப். 25
மனிதாபிமான அடிப்படையில் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அரசியல் கைதிகள் சிலரின் உறவுகள் இரண்டாவது நாளாகவும் ஆளுநர் அலுவலகம் முன்பாக உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் 11

*2021 இல் மட்டும்*

## யாழ்.போதனாவில் 85 சிசுக்கள் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 2021ஆம் ஆண்டு மாத்திரம் 85 சிசுக்கள் உயிரிழந்துள்ளதாக மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி நந்தகுமார் தெரிவித்தார். 11



# உக்ரேன் - ரஷ்யா உக்கிரப் போர்

- பெலாரஸ் வழியாக உக்ரைன் தலைநகரை நெருங்குகின்ற ரஷ்யப் படைகள்
- நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சாவு! பலர் அந்தரிப்பு
- உக்ரேனுக்கு ஆதரவாக பிரிட்டன் களமிறங்குகிறது
- யார் குறுக்கே வந்தாலும் வரலாறு காணாத அழிவு என்கிறது ரஷ்யா

மொஸ்கோ, பெப். 25
உக்ரைனின் கிழக்குப் பிராந்தியத்தில் தனது படை நடவடிக்கைகளை ரஷ்யா நேற்றுக்காலை (இலங்கை நேரப்படி) ஆரம்பித்துள்ளது. இதனையடுத்து பதில் தாக்குதலை உக்ரைனும் தொடுத்துள்ளது. உக்ரைனுக்கு ஆதரவாக தமது படைகள் களம் 15

## "லீசிங் காசு கட்டவே கொலைசெய்தேன்!"

கொலைச்சந்தேகநபர் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ பகுதியில் வயோதிபப் பெண்ணொருவர் அடித்துக் 09

## எரிவாயுக் கப்பல்களுக்கு பணத்தை விடுவியுங்கள்

கொழும்பு, பெப். 25
எரிவாயுவை ஏற்றி வந்த இரண்டு கப்பல்கள் தற்போது கடலில் 14

## 5 மணித்தியாலம் மின்வெட்டு

கொழும்பு, பெப். 25
5 மணித்தியாலங்கள் 15 நிமிடங்கள் வரை இன்று மின்வெட்டை மேற் 14

போரின் எதிரொலி

# மசகு எண்ணெய் விலை மளமளவென உயர்வு

### தங்கம் விலையும் சடுதியாக ஏற்றம்
### பங்குச் சந்தைகள் பெரும் சரிவு

கொழும்பு, பெப்ரவரி 25
**உக்ரைன்மீது ரஷ்யா தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை பரல் ஒன்றுக்கு 100 அமெரிக்க டொலர் என்றளவில் உயர்ந்துள்ளது. தங்கத்தின் விலையும் அதிகரித்துள்ளது. அத்துடன் பங்குச்சந்தை பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.** 15

## நாடாளுமன்றில் 'ரோர்ச் லைட்'

கொழும்பு, பெப். 25
நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மின்வெட்டு ஏற்பட்டால் பயன்படுத்தக் கூடிய வகையில் ரோர்ச் லைட்டை கொண்டு 09

## எமது நிலத்தைப் பறிக்காதே!

நாடாளுமன்றத்தினுள்ளும், ஜனாதிபதி செயலகம் எதிரிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பி.க்கள் ஓரணியில் நேற்றுப் பெரும் போராட்டம்!!!

கொழும்பு, பெப். 25
தமிழ் மக்களின் நிலங்கள் அரசின் பல்வேறு திணைக்களங்கள் ஊடாகவும் ஆக்கிரமிக்கப்படுவதற்கு - அபகரிக்கப்படுவதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரணியாக - ஒருமித்த குரலில் நாடாளு 15

### அரசுக்கு எதிரான சதியே எம்.பி.க்களின் போராட்டம்

கொழும்பு, பெப். 25
ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை கருத்திற்கொண்டு அரசை தர்ம 09

## 22 இந்திய மீனவர்களுக்கு மறியல் அவர்கள் பிடித்த மீன்கள் ஏலத்தில்

யாழ்ப்பாணம், பெப். 25
காரைக்கால் மற்றும் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் 22 பேர் காரைநகர் கடற்பரப்பை அண்டிய பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். இவர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் 11

## அதி வேகத்தால் பறிபோனது உயிர்

நெல்லியடியில் சோகம்

யாழ்ப்பாணம், பெப். 25

நெல்லியடியில் உள்ள வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு அண்மையில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 09

## தந்தையுடன் சென்ற பெண் ரயிலுடன் மோதி உயிரிழப்பு

சத்தம் கேட்காமையாலேயே விபத்து நடந்ததாகத் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 25
கொக்குவில் புகையிரத நிலையத்துக்கு அண்மையாக, காங்கேசன்துறை நோக்கிச் 14

ஊடகர் நிமலராஜன் கொலை:

# 22 ஆண்டுகளின் பின்னர் பிரதான சந்தேகநபர் கைது!

### வலிமை காட்டிய பிரிட்டன் பொலிஸ்

லண்டன், பெப். 25
யாழ்ப்பாணத்தில் 22 வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜன் கொலையுடன் தொடர்புடைய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப் பெண்களை இழிவுபடுத்தாதீர்கள்

## ஆளுநருக்கு கஜேந்திரன் எம்.பி. கண்டனம் மன்னிப்புக் கோரவேண்டுமென வலியுறுத்து



யாழ்ப்பாணம், பெப். 25

**தீவகப் பெண்களை இழிவுபடுத்தும் விதத்தில் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ள கருத்து கண்டனத்துக்குரியது. வடக்கு மாகாண ஆளுநர் இது தொடர்பாக உடனடியாக மன்னிப்புக் கோரவேண்டும் . இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு ஆளுநரின் செய்தியொன்று ஊடகத்தில் வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணம் தீவகத்தில் உள்ள சில பெண்கள் சமூக விரோதச் செயல்களில், அதாவது துர்நடத்தைகளில் ஈடுபடுகின்றனர் என்று அவர் தெரிவித்திருக்கிறார். வறுமை காரணமாக இது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர் என்றும், அது அவமானம் என்றும் கூறியிருக்கிறார்.

தீவகப் பெண்களை, தீவக மக்களை, தமிழ்ப் பெண்களை இழிவுபடுத்தும் விதமாக அவர் கூறிய கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன். ஆளுநர் உண்மையாகவே மனச்சாட்சி உள்ளவராக இருந்தால், தமிழ் பெண்கள் வறுமையில் இருப்பதற்கு மிகப் பிரதான காரணம் போர்க் காலப்பகுதியில் பல்லாயிரக் கணக்கான குடும்பத் தலைவர்கள் இராணுவத்தினராலும், இராணுவத் துணைக் குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டமையே என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

இந்தப் பெண்களின் நெருக்கடி நிலைக்குக் காரணமானவர்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று கோருவதற்கு முதுகெலும்பு இல்லாத ஒருவர், இவ்வாறான கீழ்த்தரமான கருத்தைத் தெரிவித்திருப்பது முழுத் தமிழர்களையும் அவமானப் படுத்தி, அவர்களின் மனதைப் புண்படுத்தியிருக்கின்றது. இதற்காக அவர் மன்னிப்புக் கோரவேண்டும்.

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25,26 மற்றும் 27ஆம் திகதிகளில் தீவகப் பகுதியில் நடந்த சுற்றிவளைப்பில் 300பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 69பேர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக எந்த விசாரணை யும் இல்லை. இதனுடன் தொடர்புடைய துணை இராணுவக் குழுவினர் தற்போது பதவிகளுடன் உலா வருகின்றனர் - என்றார். (எ-இ)



## சட்டவிரோதமாக மானை வீட்டில் வளர்த்தவர் கைது

மட்டக்களப்பு, பெப். 25

மட்டக்களப்பு- கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்குடாவெளி கிராமத்தில் 5 வயது மதிக்கத்தக்க மானை எந்தவித அனுமதியுமின்றி சட்டவிரோதமாக வீட்டில் வளர்த்த நபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

கரடியனாறு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் மானை மீட்டு, மட்டக்களப்பு வனவிலங்கு அதிகாரிகளிடம் கையளித்தனர். இதன்போது வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம-ரி1)



## வடமாகாண சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கல்

யாழ்ப்பாணம், பெப். 25

வடமாகாணத்தில் 28 சாரணர்களுக்கு இலங்கை சாரணியத்தின் உயரிய விருதான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நிகழ்நிலை பங்குபற்றலோடு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை சாரணியத்தின் உயரிய விருதான ஜனாதிபதி விருது கடந்த நான்கு வருடங்களாக வேறு காரணங்களாலும் கொரோனாத்தொற்றுக் காரணமாகவும் வழங்கப்படாததால் இந்த ஆண்டு வழங்கப்படுகின்றது.

740 மாணவர்கள் தேசிய ரீதியாக ஜனாதிபதி விருது பெற்று ஜனாதிபதி சாரணர்களாகத் தெரிவு செய்யப்பட்டதையடுத்து அவர்களுக்கான விருது மாகாண ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய வடமாகாணத்தில் 28 சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டன. நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், இலங்கை சாரணர் சங்க தலைமையக ஆணையாளர்களான அப்துல் மஹீம், ப. அஜித்குமார், மாவட்ட ஆணையாளர்கள், ஜனாதிபதி சாரணர்கள்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-ரி1-125)

## தந்தையின் இறப்பில் மகளுக்குச் சந்தேகம்

### சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு

யாழ்ப்பாணம், பெப். 25


சகோதரனுடன் நீண்ட காலமாக வசித்த, தந்தையின் இறப்பில் வெளிநாட்டில் வசிக்கும் மகள் சந்தேகம் வெளியிட்டுள்ளதால், முதியவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

மீசாலை வடக்கு கோயிலாமனை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 86 வயதான ஓய்வுபெற்ற கிராம அலுவலர், தனது மகனுடன் சங்கத்தானை - சாவகச்சேரியில் வசித்து வந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை காலை உயிரிழந்தார்.கடந்த வியாழக்கிழமை அவரது மரணச் சடங்குக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், வெளிநாட்டில் வசிக்கும் இறந்தவரின் மகள், தனது தந்தையின் இறப்பில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்தார். சாவகச்சேரி நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம், சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.சீ. இளங்கீரனின் பணிப்பின்கீழ் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-4,159)

## பேருந்துக்குக் காத்திருந்த முதியவர் விபத்தில் காயம்

மோட்டார் சைக்கிள் மோதியதில் பேருந்துக்காக காத்திருந்த முதியவர் காயமடைந்தார்.பருத்தித்துறை கிராமக் கோட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

அதிவேகமாக செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் எதிரே வந்த முச்சக்கரவண்டியை மோதியதுடன் அங்கு பேருந்துக்காகக் காத்திருந்த முதியவரை மோதியுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற இளைஞர் காயமடைந்தார். முதியவருக்கு காலில் பாதிப்பு ஏற்பட்டது. இருவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (வ-27)



## அரிய கடலாமைகள் குளியலறையில் மீட்பு

மன்னார், பெப். 25

மன்னார் கடலில் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 5 கடலாமைகள் மன்னார் பொலிஸாரால் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளன. இந்தக் கடலாமைகள் எழுந்தூர் பகுதியிலுள்ள வீடொன்றின் குளியல் அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கடலாமைகள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட ஆமைகள் அரிய வகையான 'பேராமை' வகையைச் சேர்ந்தவை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆமைகள் மீட்கப்பட்ட வீட்டில் யாரும் இருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட ஆமைகள் மன்னார் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என்றும், இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (எ-56,213)

## யாழ். கோட்டைப் பகுதியில் நாளையதினம் துப்புரவுப்பணி

யாழ். கோட்டையை சுற்றியுள்ள பகுதிகளில் நாளையதினம் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை இளையோரால் துப்புரவுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாகவே நாளையும் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்

# மனிதப் புதைகுழி அகழ்வில் வெளிப்படை பேணவேண்டும்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை

**மன்னார், பெப். 25**
**மன்னார் மனிதப் புதைகுழியில் மீண்டும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் அழைக்கவேண்டுமென்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சதொச நிறுவனம் இருந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்காக தோண்டப்பட்ட இடத்தில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை எமது உறவுகளுடைய எச்சங்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எனினும் சட்டத்தரணிகள் தடுக்கப்பட்டனர். அதனால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தோம். அதனடிப்படையில் வவுனியா மேல் நீதிமன்றால் எமக்கு நல்லதொரு தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த மனித எச்சங்கள் யாருடையவை என்பதை அறியத்தரவேண்டும். அகழ்வுப் பணியின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்களும் அங்கு சென்று நேரடியாகப் பார்வையிட அனுமதிக்கவேண்டும்- என்றனர். (ம-4-213)

## மெலிசா கொலை: குற்றவாளிக்கு தூக்கு உறுதி

கொழும்பு, பெப். 25
ஊடகவியலாளர் மெலிசா குணசேகர கொலை வழக்கில் குற்றவாளிக்கு கொழும்பு நீதிமன்றம் வழங்கிய தூக்குத் தண்டனையை, மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
பத்திரமுல்ல, சுப்புதிபுரவில் உள்ள மெலிசா குணசேகரவின் வீட்டுக்குள் நுழைந்து கொள்ளையிட்டநபர், கூரிய ஆயுதத்தால் மெலிசாவை தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக அருளானந்த அந்தோனி ரம்சன் கைது செய்யப்பட்டார். 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 2ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் சட்மா அதிபரால் வழக்குத் தொடரப்பட்டது.
2017ஆம் ஆண்டு ஜுலை 5ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உரிய குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளி எனத் தீர்ப்பளித்து, தூக்குத் தண்டனை விதித்தது. அதற்கு எதிராகப் பிரதிவாதி மேன்முறையீடு செய்திருந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றமும் தூக்குத் தண்டனையை உறுதி செய்துள்ளது. (எ-இ)

## திறமையில்லாத அரசால் மாணவருக்கு நெருக்கடி!

### இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25
கா.பொ.த. உயர்தரப் பரீட்சை முடியும்வரையில் மின்வெட்டைத் தவிர்க்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.
அரசாங்கத்தின் திறமையின்மையால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் காரணமாக மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
மாணவர்களின் நலனைக் கருதி, மின்வெட்டை ஒத்திவைக்க வேண்டும்.
மாணவர்கள் மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தி படிப்பில் ஈடுபட வழி செய்யப்பட வேண்டும் என்று சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பிரபாகரனுக்கு ஆயுத கலாசாரம் சொல்லிக்கொடுத்தது ஜே.வி.பி.

### ராஜித கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 25
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஆயுத கலாசாரத்தைக் கற்றுக்கொடுத்தவர்கள் ஜே.வி.பியினரே என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன.
1989ஆம் ஆண்டு ஜே.வி.பி. இந்த நாட்டுக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தியது. நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தி, அந்த ஆயுத கலாசாரத்தையே பின்னர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கற்றுக் கொண்டார் என்று அவர் தெரிவித்தார். (எ-இ)

# மீண்டும் பணிப்புறக்கணிப்பு சுகாதார நிபுணர்கள் தீர்மானம்

கொழும்பு, பெப். 25
சுகாதார நிபுணர்கள் சம்மேளனம் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது என அதன் ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். சுகாதார நிபுணர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இதனையடுத்து மார்ச் 2ஆம் திகதி முதல் மீண்டும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்க சுகாதார நிபுணர்கள் சம்மேளனத்தின் நிர்வாக சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.
நிறைவேற்று அதிகாரிகளின் ஒன்றிணைந்த குழு சமர்ப்பித்த சம்பள முன்மொழிவு முரண்பாடுகளை அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




வேலியே பயிரை மேயிறது இப்ப இஞ்ச சர்வ சாதாரணமாகிட்டுது. முக்கியமா அச்சுவேலிப் பக்கம் அடிக்கடி இப்பிடியான சம்பவங்களப் பாக்கலாம். இந்த மாசம் அஞ்சாம் திகதி அச்சுவேலிப் பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்னால ஒரு சைக்கிளும் மோட்டார் பைக்கும் மோதுப்பட்டு அக்சிடன்ட் ஆகிட்டுது. அந்த நேரம் அங்க வந்த ஒரு பொலிஸ் அதிகாரி மோட்டர்பைக்கில வந்த பெடியனிட்ட 'ஐயாயிரம் ரூபா தந்தா விசயத்த இப்பிடியே அமத்திப் போடுவன். இல்லாட்டிக்கு தேவையில்லாமல் வழக்கெண்டு அலைஞ்சு திரிய வேண்டியிருக்கும்' எண்டு சொல்ல அந்தப் பெடியனும் ஐயாயிரத்தக் குடுத்திட்டு வீட்ட போட்டார்.

பொலிஸூக்குக் காசு குடுத்தாச்சுத் தானே. இனிப் பிரச்சினையில்ல எண்டு அந்தப் பெடியன் நினைச்சுக் கொண்டிருக்கேக்க, அண்டைக்கு நடந்த அக்சிடன்ட் சம்பந்தமான வழக்குக்கு வரச்சொல்லி நோட்டீஸ் வந்திட்டுது. வேற வழியில்லாமல் ஆள் நீதிமன்றத்துக்குப் போக அங்க, விபத்தை ஏற்படுத்தினது எண்டு சொல்லி தண்டப்பணமும் விதிச்சுப் போட்டினம்.

பொலிஸூக்கு காசு குடுத்த பெடியனுக்கு கடும் ஆத்திரம். 'காசையும் வாங்கிப்போட்டு கேசையும் போட்டிட்டியே?' எண்டு. தான் காசு குடுத்த பொலிஸோட கடுமையா வாக்குவாதப்பட்டிருக்கிறார் பெடியன். காசு வாங்கின பொலிஸ் திருப்பிக் கதைக்கேல. கதைச்சால் தன்ர பொட்டுக்கேடு வெளியில வந்திடும் எண்டு பயம். அதால அண்டைக்கு இரவு அந்தப் பெடியனை பொலிஸ் ஸ்ரேசனுக்கு வரச்சொல்லிக் கூப்பிட்டிருக்கிறார். வந்தவனிட்ட தான் வாங்கின ஐயாயிரம் ரூபாயை திருப்பிக் குடுத்திட்டார். ஆனால், பெடியனுக்கு கோபம் போகேலை. அடுத்த நாளே அதே பொலிஸ் ஸ்ரேசனுக்கு வந்து அந்த அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு செய்திருக்கிறார். ஆனால், ஒரு பாம்பின்ர காலை இன்னொரு பாம்பு காட்டிக் குடுக்குமோ? அதால அந்த முறைப்பாடு சம்பந்தமான எந்த விசாரணையும் இதுவரை செய்யப்படேலையாம்.

ஏற்கனவே அச்சுவேலி பொலிஸ் ஸ்ரேசன் பற்றி நிறையப் புகார் மேலிடத்துக்குப் போயிருக்கு. கிட்டடியிலையும் அந்த அச்சுவேலி பொலிஸ் ஸ்ரேசனில இருந்து ஒரு கொன்ஸ்டபிள் ஊழல் செய்தவர் எண்டு இடமாற்றப்பட்டவர். அதேமாதிரி இப்பவும் ஊழல் செய்யிற ஆக்களுக்கு என்ன பனிஸ்மன்ட் குடுக்கப் போகினம் எண்டதுதான் சனத்தின்ர எதிர்பார்ப்பு.



- பட்சி

# வடக்கு மாகாண மக்களின் காணிகளில் கைவைக்கோம்

## வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்னாயக்கஉறுதி

கொழும்பு, பெப். 25
வனப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களின் காணிகளை கையகப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. வடக்கு மக்களுக்கு அநீதி ஏற்படுவதற்கு இடமளிக்கமாட்டேன் என்று வனஜீவ ராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்னாயக்க தெரிவித் தார்.

மகாவலி மற்றும் வனப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கு எதிர்ப் புத் தெரிவித்து வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபைக்குள்ளும் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர்,

வனப் பாதுகாப்பு என்ற போர்வையில் தனியாருக்குரிய காணிகளை கையகப் படுத்த எந்தவித ஏற்பாடுகளும் இல்லை. அதற்கான பொறுப்பை நான் ஏற்கின் றேன். வடக்கில் இருந்தாலும், தெற்கில் இருந்தாலும் மலையகத்தில் வாழ்ந்தா லும் மக்கள் மக்கள்தான். எனவே, அவர்களின் இடங்களில் கைவைக்கக் கூடாது. சிலர் இதன்மூலம் சர்வதேசத் துக்கு செய்தி சொல்ல முற்படுகின்றனர். அதற்கும் நான் இடமளிக்கமாட்டேன். வன உயிரிகள் திணைக்களத்துக்குரிய இடங்கள் அல்லாத மக்களுக்குரிய நிலங்களை பயிர்ச் செய்கையில் ஈடுப டுத்துவதற்காக கையகப்படுத்த நாம் தயாரில்லை. நான் மன்னார் சென்றி ருந்தேன். சார்ள்ஸ் எம்.பியுடன் பேச்சு நடத்தினேன். இணக்கப்பாடும் ஏற்படுத் தப்பட்டது. எனவே, என்ன நடக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும். வடக்கு மக்களுக்கு அநீதி ஏற்பட இடமளிக்கப் படாது - என்றார். (ம-4,44)

# சர்வதேசத்துக்காகவே கூட்டமைப்பு நாடகம்!

## கூறுகிறது அரச தரப்பு



**கொழும்பு, பெப். 25**
**பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நோக்கம் அல்ல. சர்வதேசத்துக்கா கவே கூட்டமைப்பினர் போராட்டம் நடத்துகின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

நில அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரி வித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப் பினர் நேற்று சபைக்குள்ளும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் போராட்டத்தில் ஈடுபட்ட னர். ஜனாதிபதி செயலகத்துக்கு சென்றிருந்தனர். அவர்களைச் சந்திக்க குறைந்தபட்சம் அதிகாரி ஒருவர் கூட வரவில்லையென்று சுட்டிக்காட்டியிருந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தி டம் நான் வினவினேன். ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக விசேட செயலாளர் ஒருவரும், பணியாளர் குழுவினரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற இடத்துக்குச் சென்றுள்ள னர். அங்கு ஜனாதிபதியைச் சந் திக்க கூட்டமைப்பினர் வாய்ப்புக் கோரியுள்ளனர். இன்று (நேற்று) ஜனாதிபதி வேறு வேலைகளில் இருப்பதால், சந்திக்க முடியா தென்று தெரிவிக்கப்பட்டது. பிரத மரை உடன் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தரப்படும் என்று கூறப்பட் டது. கூட்டமைப்பு எம்.பிக்களுடன் அலரிமாளிகையில் பேச்சு நடத்து வதற்கு பிரதமரும் தயாராகவே இருந்துள்ளார். அதனை இவர்கள் நிராகரித்துள்ளனர். பிரதமரை வீதிக்கு அழைத்துள்ளனர்.

எனவே, கூட்டமைப்பினர் நியாய மாக நடந்துகொள்ளவேண்டும். சந்திப்புக்கு நேரம் வழங்கியும் அத னைப் பயன்படுத்தவில்லை. இதன் மூலம் அவர்களின் நோக்கம் என்னவென்பது தெளிவாகின்றது. பிரச்சினைக்குத் தீர்வைத் தேடுவது அவர்களின் நோக்கம் அல்ல. சர் வதேச கவனத்தை ஈர்க்கவே இப்ப டியான செயலில் ஈடுபட்டுள்ள னர்-என்றார். (ம-4,44)

### தமிழ்மக்களுக்காக

# ஜனாதிபதியின் வீட்டையும் முற்றுகையிடத் தயங்கோம்

## கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25
தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வைப் பெற்றுத்தரத் தவறினால், ஜனாதிபதி செயலகத் தையோ அல்லது ஜனாதிபதியின் வீட்டையோ முற் றுகையிடத் தயங்கோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் நேற்றுப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக் கையில்;

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளு மன்ற உறுப்பினர்களாக நாம் ஜனாதிபதி செயலகத் துக்கு முன்பாக கூடியுள்ளோம். இது ஆரம்பம் மாத் திரமே. எமது கோரிக்கையை நிறைவேற்றத் தவறி னால் ஜனாதிபதியின் வீட்டை முடக்குவோம்.

அதேபோன்று இங்கு நாம் போராட்டத்தை முன்னெ டுக்கும்போது, ஊடகவியலாளர்கள் இல்லாத சிலர் வந்து எங்களை ஒளிப்படம் எடுக்கின்றனர். தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள எங்களுக்கே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்படு கின்றது என்றால், வடக்கு-கிழக்கில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் எவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது- என்றார். (ம-4,213)

# தமிழ்மக்கள் மீது கூட்டமைப்புக்கு துளியளவும் அக்கறை இல்லையாம்

## கூறுகிறார் சேமசிங்க

கொழும்பு, பெப். 25
தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் களுக்குத் துளியும் அக்கறை இல்லை. புலிகளை அன்று வழி நடத்தியவர்களின் தேவைக்கேற் பவே இவர்கள் செயற்படுகின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் செயான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற விவாதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும்போது, இவர்கள் (தமிழ் எம்.பிக்கள்) சர்வ தேசத்துக்காக எதையாவது கதைக்க முற்படுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களே நல் லாட்சி அரசை வழிப்படுத்தினர். கூட்டமைப்பினரைத் திருப்திப்படுத் தவே தேர்தல் தொடர்பான சட்டவ ரைவுகூட வாபஸ் பெறப்பட்டது. எனவே, நல்லாட்சியின்போது இவர் களால் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாமற் போனதற்கு தற்போது நாம் பொறுப்புக்கூற முடி யாது.

கூட்டமைப்பினரைப் போன்று சும்மா இருப்பவர்கள் அல்ல எமது ஆளுங்கட்சி உறுப்பினர்கள். எனவே, ஜனாதிபதியைச் சந்திக்கச் செல்வதாக இருந்தால் முன்கூட் டியே நேரம் ஒதுக்கப்படவேண்டும் என்பது இவர்களுக்குத் தெரிந்தி ருக்கவேண்டும். நினைத்த நேரத் தில் ஜனாதிபதியைச் சந்திக்க முடி யாது.

தமிழ்மக்கள் தொடர்பில் இவர்கள் அக்கறைப்படவேண்டியதும் இல்லை. ஏனெனில் தீவிரவாதி களை வழிநடத்தும் குழுவினர் இவர் களைச் சிறப்பாக பாதுகாத்துக் கொள்கின்றனர். அதனால்தான் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள இனவாதம் பேசி கதைக்கின்றனர் - என்றார். (ம-4-44)

# மியான்மர் அரிசிக்கு அதிகவிலை

கொழும்பு, பெப். 25
மியான்மாரின் இலங்கைக் கான ஏற்றுமதி உலகின் ஏனைய நாடுகளைவிடவும் அதிக விலையை பெறுகின் றது என்று மியான்மர் தெரி வித்துள்ளது.

அந்நாட்டின் அரிசி களஞ்சி யசாலைச் செயலாளர், சர்வ தேச ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோது இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில்;

மியான்மர் ஒருதொன் அரி சியை 340 முதல் 350 அமெரிக்க டொலருக்கு ஏனைய நாடுகளுக்கு ஏற்று மதி செய்கின்றது. ஆனால் இலங்கைக்கு ஒரு தொன் அரிசியை 440 முதல் 450 அமெரிக்க டொலருக்கு ஏற்று மதி செய்கின்றது - என்றார். (ம-எ-இ)

# அரசியல் இருப்புக்காகத்தான் தமிழ் எம்.பிக்கள் போராட்டம்

## அங்கஜனும் பக்கப்பாட்டு

கொழும்பு, பெப். 25
காணி அபகரிப்புக்கு எதிராக, தமிழ்பேசும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் சிலர் உடனடியாக கூடிப்பேசி மேற்கொண்ட போராட்டம் தமது அரசியல் இருப்புக் கான போராட்டமேயன்றி வேறொன்றுமில்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன். இது தொடர்பான அவரது ஊடக அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


வடக்கு- கிழக்கில் தொல்லியல்துறை, மகாவலி அதி காரசபை, வனத்துறை உள்ளிட்ட துறைகளால் மக் களது காணிகள் கையகப்படுத்தப்படுவது தொடர்பில், உரிய கரிசனையோடு நாம் செயற்படுவருகின்றோம். நாட்டின் ஏனைய பாகங்களோடு ஒப்பிடுகையில் இந்த விடயம் ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் உள்ளிட்டவர்களிடம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

காணிசார்ந்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து, தீர்வொன்றைப் பெறுவதற்கான உயர்மட்டக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி வெளியுறவுத் துறை அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், நல்லாட்சி காலத்தில், ஆரம்பிக்கப்பட்ட இந்தக்காணி கையகப்படுத்தல்களை கட்டுப்படுத்த முடியாதவர்கள் தற்போது தமது அரசியல் இருப்புக் கான நாடகமொன்றை மேற்கொண்டுள்ளனர் - என் றுள்ளது. (ம-4,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்
# எரிபொருள் தட்டுப்பாட்டால் ஓட்டோ சேவை நிறுத்தம்



**கிளிநொச்சி, பெப். 25**

**கிளிநொச்சி மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இன்மையால், பெருமளவான முச்சக்கரவண்டிகள் பயணிகளுக்கான சேவையை நிறுத்தியுள்ளன.**

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இன்மையால் தனியார் விற்பனை நிலையங்களில் அதிக விலைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்து முச்சக்கரவண்டிகளை சேவையில் ஈடுபடுத்த முடியாது.

கூடுதல் கட்டணத்தையும் பயணிகளிடம் அறவிட முடியாது.

கடந்த இரண்டு நாள்கள் தொழில் முடங்கியுள்ளதால், எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எரிபொருள் நெருக்கடியைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாவட்ட முச்சக்கர வண்டிச் சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4,113)

# 300 பேக்கரிகள் முற்றாக மூடல்!

*அவற்றின் உபகரணங்களும் விற்பனை*

கொழுப்பு, பெப். 25

நாட்டில் சுமார் 200 தொடக்கம் 300 வரையான சிறிய பேக்கரிகள் முற்றாக மூடப்பட்டுள்ளன. அவற்றின் உபகரணங்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அனைத்து பேக்கரி உரிமையாளர்களும் அநாதரவான நிலையில் உள்ளனர். பேக்கரித் தொழிலை இனிமேலும் கொண்டு நடத்த முடியாது. நாட்டிலுள்ள 7 ஆயிரம் பேக்கரிகளில் சுமார் 4 ஆயிரம் பேக்கரிகள் வாரத்தில் 5 நாள்கள் மட்டுமே பாணை உற்பத்தி செய்கின்றன.

கோதுமைமாவின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு, பாம் ஓயில், தேங்காய் எண்ணெய் மற்றும் மாஜரின் விலை முன்பைவிட 100 வீதம் அதிகரித்துள்ளது.

இதனை பேக்கரி உரிமையாளர்களால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி, பேக்கரித் தொழிலைப் புத்துயிர் பெறச்செய்ய ஜனாதிபதி தலையிட வேண்டும் - என்றார். (ம-4-இ)



## எரிபொருளுக்கு
# தட்டுப்பாடு நிலவினாலும் விலை அதிகரிக்கப்படாது

*அமைச்சர் உறுதி*

கொழும்பு, பெப். 25

நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றபோதும், எரிபொருளின் விலை அதிகரிக்கப்படாது என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களை ஏற்றிக்கொண்டு நாட்டை வந்தடைந்துள்ள 3 எரிபொருள் கப்பல் களில் உள்ள டீசல், பெற்றோலைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் டீசல் தட்டுப்பாடு உள்ளது. டீசலை ஏற்றிவந்த கப்பலில் உள்ள டீசலைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் குறிப்பிட்ட அளவான டீசலையே நாம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளோம். இதுவே டீசல் தட்டுப்பாட்டுக்குக் காரணம்.

தென்னாசியாவிலேயே இலங்கையில் மாத்திரமே எரிபொருள் விலை குறைவாகக் காணப்படுகின்றது. எரிபொருளைக் குறைந்த விலையில் விற்பனை செய்யும் நாடுகளில் இலங்கை 22ஆவது இடத்தில் உள்ளது - என்றார். (ம-4-இ)

# சகல டிப்போக்களிலும் எரிபொருள்கள் இருப்பு

*போக்குவரத்துச் சபை தெரிவிப்பு*

கொழுப்பு, பெப். 25

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளுக்குத் தேவையான எரிபொருள் இருப்புக்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

முன்பதிவு செய்யப்பட்ட எரிபொருள் இருப்புக்களை உடனடியாக வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பற்றாக்குறை ஏற்பட்டதால் பேச்சு நடத்தப்பட்டது. எனினும் தற்போது இலங்கை போக்குவரத்துச் சபைக் களஞ்சியசாலைகளில் போதுமான எரிபொருள் இருப்பு உள்ளது. ஏதேனும் ஒரு டிப்போவில் பற்றாக்குறை ஏற்பட்டால் அருகிலுள்ள டிப்போவில் பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்கப்படும்.

தற்போது 4 ஆயிரத்து 750 பேருந்துகள் இயக்கப்பட்டு வரும் நிலையில், டீசலுக்கு ஒவ்வொருநாளும் முன்பதிவுகள் வழங்கப்படுகின்றன.

எனவே தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். இலங்கை போக்குவரத்துச் சபைக்கு எரிபொருள் தொடர்பில் எந்த வித சிரமங்களும் ஏற்படாது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளரான பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# எரிபொருள் விலை அதிகரித்தால் பேருந்து சேவைகள் நிறுத்தப்படும்

*தனியார் பேருந்துச் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, பெப். 25

எரிபொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டால், பேருந்துச் சேவைகளை நிறுத்தவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவிக்கையில்,

டீசல் பற்றாக்குறையால் 50 வீதமான பேருந்துகள் வீதியில் நிற்கின்றன. சில சந்தர்ப்பங்களில், சில பேருந்துகள் பாதியிலேயே நிறுத்தப்படுகின்றன. எரிபொருள் விலை அதிகரிக்கும் ஒவ்வொருமுறையும், பேருந்துக் கட்டணத்தையும் உயர்த்த முடியாது.

டீசல் விலை மீண்டும் உயர்ந்தால், அனைத்து உதிரிப்பாகங்கள் மற்றும் ரயர்கள், டியூப்புக்கள், எண்ணெய் மற்றும் கிரீஸ் வகைகள் போன்ற துணைப்பொருள்களின் விலையும் உயரும். போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், எரிபொருளைச் சேமிக்கவும் பல தீர்வுகளை நாம் முன்வைத்துள்ளோம். பேருந்துக் கட்டணமாக பணம் செலுத்துவதற்குப் பதிலாக, முற்பணம் செலுத்திய பயண அட்டையை அறிமுகப்படுத்த முன்மொழிந்துள் ளோம் - என்றார். (ம-4-இ)

# விடுவிக்கப்பட்ட டீசல் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, பெப். 25

4 நாள்கள் தாமதத்தின் பின்னர் விடுவிக்கப்பட்ட டீசல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் பொது முகாமையாளர் சமிந்திர அபேசேகர தெரிவித்துள்ளார்.

கப்பலில் இருந்து டீசல் இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முத்துராஜவெல களஞ்சியசாலையிலும், கொலன்னாவ களஞ்சியசாலையிலும் டீசல் சேமிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# எரிபொருள் நெருக்கடி நிலைக்கு டொலர் தட்டுப்பாடுதான் காரணம்

*பொறியியலாளர் சங்கம் விளக்கம்*

கொழும்பு, பெப். 25

நாட்டில் தற்போது எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடில்லை.

தருவிக்கப்பட்ட எரிபொருள்களை விடுவிக்க டொலர் இல்லாமையே காரணம் என்று இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பேச்சாளர் நந்திக பத்திரகே தெரிவிக்கையில்,

37 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலுக்கு 33 மில்லியன் அமெரிக்க டொலரை அரசு விடுவித்தது. ஆனால், 8 ஆயிரம் மெற்றிக்தொன் நுகர்வோர் பயன்பாட்டுக்காக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துத் துக்கொடுக்கப்பட்டால், மின்சார சபைக்கு எஞ்சியுள்ள 31 ஆயிரம் தொன் டீசல் 7 நாள்களுக்கு மட்டுமே போதுமானது.

எனினும் எரிபொருளுக்காக மில்லியன் டொலர் விடுவிக்கப்பட்டுள்ளது என்று கூறி, மக்களை ஏமாற்றுகின்றனர். முழு நாட்டுக்கும் மின்சாரம் வழங்கும் போது, மில்லியன் டொலர் ஒரு சிறிய தொகையாகும்.

புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி குறித்த திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போது, முட்டாள்தனமான அணுகுமுறையை நாடினர். அதனால் இன்று முழு நாடும் பாதிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்குப் பணமில்லை என்றாலோ, மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்கு எரிபொருள் இல்லாவிட்டாலோ, மின்சாரத்தைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கான திட்டம் எதுவும் இலங்கை மின்சார சபைக்கு இல்லை - என்றார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமெந்து, பால்மா; நீங்குகின்றது வரி




கொழும்பு, பெப். 25

**பால்மா, சிமெந்து ஆகியன மீதான வரியை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் தற்போது எரிவாயு, அரிசி, சீனிக்குத் தட்டுப்பாடு இல்லை. ஆனால், பால்மாவுக்கும், சிமெந்துக்கும் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டுக்கு முழுமையான தீர்வைக் காணமுடியாதுள்ளது.

எனவே இவற்றின் மீதான வரியை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டையில் திறக்கப்படவுள்ள சிமெந்து தொழிற்சாலையிலிருந்து மாதமொன்றுக்கு 3 மில்லியன் சிமெந்து மூடைகள் சந்தைக்கு விநியோகிக்கப்படும். சிமெந்து மூடைகளுக்கான பைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும்வகையில், உள்ளூர் சட்டங்களைத் தளர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என்றார். (வ-இ)

## பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அதிகளவு பணம் அச்சிடப்படுகிறது

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 25

இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள போதும், அரசாங்கம் அதிகளவில் பணத்தை அச்சிட்டுள்ளது என்று எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நாடாளுமன்றில், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் எதிர்க்கட்சியால், கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 24 மாதங்களில் அரசாங்கத்தினால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா பணம் அச்சடிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் பணவீக்கம் 16 வீதமாக அதிகரித்துள்ளது. 25 வீதம் உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் வங்கிக் கட்டமைப்பும் வெகு விரைவில் வீழ்ச்சி காணும் -என்றார். (ம-4-இ)

## பரசிட்டமோல் மாத்திரைகளுக்கு உள்ளூர் சந்தையில் தட்டுப்பாடு

கொழும்பு, பெப். 25

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் திரிபு, வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்குப் பரவல் ஆகியவற்றின் அதிகரிப்புக் காரணமாக கடந்த 3 வாரங்களில் பரசிட்டமோல் மாத்திரைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது.

இவ்வாறு ஒளடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலக சந்தையில் பரசிட்டமோல் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களின் விலை அதிகரித்துவருவதால், பெரும்பாலான நிறுவனங்கள் அவற்றை இறக்குமதி செய்யாமல் இருக்க முயற்சிக்கின்றன. அதனால் உள்ளூர் சந்தையில் பரசிட்டமோல் மாத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தேவையானயளவு பரசிட்டமோல் மாத்திரைகளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் அதிகளவில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது - என்றார். (ச-இ)

## மூன்று மாதங்களுக்கான பொருள்கள் கையிருப்பு!


### பஸில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25

இலங்கை சுங்கத்திணைக்களத்திடம் உள்ள தரவுகளின் அடிப்படையில், இலங்கையில் மூன்று மாதங்களுக்குப் போதுமான அத்தியாவசியப் பொருள்கள் உள்ளன என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல இடங்களுக்கு விநியோகிக்கப்பட்ட பொருள்கள் குறித்த தரவுகள் இல்லை. சுங்கத்திணைக்களம் மற்றும் மொத்த வியாபாரிகளின் தரவுகளின் அடிப்படையில், மூன்று மாதங்களுக்குப் போதுமான அத்தியாவசியப் பொருள்கள் சந்தையில் உள்ளன. வியாபாரிகள் பொருள்களை விற்பனை செய்யாவிட்டால் அல்லது நிபந்தனைகளை விதித்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-4-இ)



### அதுகல்புர நுழைவாயில்

## முதல் மாதத்திலேயே ரூ.100 மில். வருமானம்

கொழும்பு, பெப். 25

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம்கட்ட அதுகல்புர நுழைவாயில் திறக்கப்பட்டு, முதல் மாதத்திலேயே அரசாங்கம் ரூ.100 மில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டியுள்ளது என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மீரிகமவிலிருந்து குருநாகல்வரையான இந்தப் பகுதி நெடுஞ்சாலை கடந்த ஜனவரி 15ஆம் திகதி திறக்கப்பட்டது.

மறுநாள் 16ஆம் திகதியிலிருந்து அதனூடாகப் பயணிப்பதற்கு கட்டணம் அறவிடப்பட்டது. 16ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 5 லட்சத்து 10 ஆயிரத்து 670 வாகனங்கள் இவ்வீதியூடாகப் பயணித்துள்ளன.

அதன் மூலம் 100 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வ-20)



### ஏப். 21 தாக்குதல்

## விசாரணை அறிக்கையை மென்பிரதியில் வழங்குக

### எம்.பிக்கள் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு, பெப். 25

67 ஆயிரத்துக்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை, வாசிப்பதற்கு இலகுவாக மென் பிரதியில் வழங்க வேண்டும் என்று ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரே இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

'நீண்ட நாள்களாக கத்தோலிக்க மக்கள் உள்ளிட்ட அனைவரும் கோரிவந்த ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதிகளவான பக்கங்களை இந்த அறிக்கை கொண்டிருப்பதால், இந்த அறிக்கையின் மென் பிரதிகள் வழங்கப்பட வேண்டும்' என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

'ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை, 87 புத்தகங்களில் 69 ஆயிரத்து 800 பக்கங்களைக் கொண்டுள்ளது. இவ்வளவு பெரிய அறிக்கையை வீட்டுக்கு எடுத்துச் செல்வது சிரமம். இதன் மென் பிரதிகளை வழங்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்தார். (ம-4-இ)

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஆதாரங்கள் நாடாளுமன்றத்தில்

கொழும்பு, பெப். 25

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, தனது இறுதி அறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சாட்சியப் பதிவுகள் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்கள் மற்றும் ஆவணத் தொகுப்புக்களை, நாடாளுமன்றத்தில் ஒப்படைத்தது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சியங்களுக்கமைய தயாரிக்கப்பட்ட 88 தொகுப்புகளுடனான முழுமையான அறிக்கை, ஜனாதிபதியின் சட்டத்துறைப் பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்த ரோஹணதீரவால், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்கள் மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்பட வேண்டும் என்பதற்காகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேலதிகப் பரிசீலனைக்காகவும், மேற்படி ஆவணங்கள் நாடாளுமன்றத்தில் கையளிக்கப்பட்டன என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கூர்மையாகும் போர்முனை

மூன்றாம் உலகப் போருக்கான போர்முனை கிழக்கு ஐரோப்பாவில் கூர்மையடைந்திருக்கின்றது. உக்ரைனின் எல்லைகளில் இராணுவத்தைக் குவித்து போர்ப்பதற்றத்தை வலுப்படுத்தி வந்த ரஷ்யா, நேற்று முன்னிரவு உக்ரைன் மீது அதிரடியாகத் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த இராணுவ நடவடிக்கையை அடுத்து ரஷ்ய ஆதரவு – உக்ரைன் ஆதரவு அணிகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இந்த நிலைமை மற்றொரு பேரவலத்தை நோக்கி உலகத்தைத் தள்ளக்கூடிய அத்தனை சாத்தியப்பாடுகளையும் தெளிவாக ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏன் இந்த மோதல்? ரஷ்யா ஏன் உக்ரைனை ஆக்கிரமிக்கத் துடிக்கின்றது? சோவியத் யூனியன் என்ற அமைப்பில் இருந்த பெரிய நாடுகளில் ஒன்று உக்ரைன். சோவியத் ஒன்றியம் பிளவடைந்தபோது 1991ஆம் ஆண்டு உக்ரைன் தனிநாடாகச் சுதந்திரம் பெற்றது. தனிநாடாக உருவெடுத்த மிகக் குறுகிய காலத்திலேயே தன்னை மேற்கத்தேய கட்டமைப்பாக மாற்றுவதற்கு பெரும் பிரயத்தனங்களை உக்ரைன் மேற்கொண்டது. 1994ஆம் ஆண்டுமுதல் உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கு முயன்று வருகின்றது.

உக்ரைன் நேட்டோவில் இணைந்தால், அது தனது பாதுகாப்புக்குப் பங்கம் என்று ரஷ்யா கருதுகின்றது. இதனால், நேட்டோக் கூட்டணியையும் அதில் உக்ரைனை இணைக்க வலிந்து மேற்கொள்ளும் முனைப்பையும் ரஷ்யா எதிர்த்தது – போர்க்கொடி தூக்கியது. அன்று முதல் இன்று வரையில் உக்ரைன் நேட்டோ – ரஷ்யா விவகாரம் கிழக்கு ஐரோப்பாவின் போக்கைத் தீர்மானிக்கும் விடயமாகவே மாறிவிட்டது. உக்ரைன் மற்றும் ரஷ்யா எல்லையில் ரஷ்யா ஆதரவு பெற்ற கிளர்ச்சிக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால், காஸா, கஷ்மீர், டெல் அவிவ் போன்று உலகில் பதற்றமான நிலப்பரப்புகளில் ஒன்றாக உக்ரைன்– ரஷ்யா எல்லையும் மாறியிருந்தது– இருக்கின்றது.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவி வகித்த காலத்தில் ரஷ்யா – அமெரிக்கா இடையில் அவ்வளவாக மோதல் போக்கு நிலவவில்லை. ட்ரம்ப் ஆட்சியில் அமர்வதற்கு ரஷ்யா மறைமுக உதவிகளைச் செய்தது, ரஷ்யாவின் கைப்பாவையாக ட்ரம்ப் செயற்படுகின்றார் என்று விமர்சிக்கப்படும் அளவுக்கு ரஷ்யாவுடன் சகிப்புத் தன்மையை ட்ரம்ப் பின்பற்றினார். இதனால், கிழக்கு ஐரோப்பாவில் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான உக்ரைனை –ரஷ்யா அவ்வளவு எதிர்க்கவில்லை – பகைக்கவில்லை.


ஆனால், பைடனின் ஆட்சி அவ்வாறல்ல. ஜனநாயகக் கட்சியின் (பைடன் சார்ந்த கட்சி) கொள்கையே ரஷ்ய எதிர்ப்புதான். இதனால் பைடன் ஆட்சிப்பீடம் ஏறிய பின்னர் மீண்டும் வேதாளம் முருங்கையேறத் தொடங்கியது. நேட்டோவில் உக்ரைனை இணைக்கும் முயற்சியில் பைடன் தீவிரம் காட்டினார். இதற்குப் பதிலடியாகவே வொஷிங்டன் எதிர்பாராத வகையில் வினையாற்றி இராணுவ நடவடிக்கையை அரங்கேற்றியுள்ளது ரஷ்யா.

இந்தப் போர்முனை ரஷ்யாவுடனோ– உக்ரைனுடனோ– அமெரிக்காவுடனோ அல்லது நேட்டோக் கூட்டணியுடனோ முடிந்துபோகும் விடயமல்ல. ரஷ்யாவின் பொருளாதாரத்தில் கச்சா எண்ணெய், எரிவாயு என்பனவும் முக்கியமானவை. இனி நேட்டோக் கூட்டணியும், மேற்கத்திய நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் தனித் தனியாகவும் கூட்டாகவும் தடைகளை விதிக்கும். இதனால், ரஷ்யாவை தனிமைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இலங்கையும் விரும்பியோ அல்லது விரும்பாமலோ தள்ளப்படும். ரஷ்யாவுக்கான ஏற்றுமதிகளை இலங்கை மேற்கொள்வதற்கு தடங்கல் ஏற்படும். இது இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்படும் தடை காரணமாக இயல்பாக ஏற்படும் அதிகரித்த கேள்வி, ஏகப்பட்ட பொருள் தட்டுப்பாட்டையும் அதற்கேற்ற விலையேற்றத்தையும் சர்வதேச அளவில் உண்டுபண்ணும். இலங்கையும் அதனால் வதைபடும்.

ஏற்கனவே வெந்த புண்ணாக இருக்கும் எம்மை நோக்கி இம்முறை கிழக்கு ஐரோப்பாவில் இருந்து வேல் பாயவுள்ளது.

### நாளொரு நல்வார்த்தை

"அரைகுறையாக எதையும் செய்யாதீர். நல்லவை என்றால் துணிந்து நிறைவேற்றுங்கள். கெட்டது என்றால் அதைச் செய்யாமல் அறவே தவிர்த்து விடுங்கள்" – கில்ப்பின்




# குற்றவாளியென்றால் நிரூபித்துக்காட்டுக!

## சந்தேகநபராக தடுத்து வைக்காதீர்கள் என்று அரசியல்கைதியின் மனைவி உருக்கம்

**யாழ்ப்பாணம், பெப். 25**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கடந்த இரண்டு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள எனது கணவர் குற்றம்புரிந்திருந்தால் அவருக்குத் தண்டனை வழுங்குங்கள். சந்தேகநபராக சிறையில் வைத்து காலத்தை வீணடிக்காதீர்கள். இவ்வாறு யாழ். சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதியொருவரின் மனைவி கோரிக்கை விடுத்தார்.**



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி வடமாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் நேற்றுமுந்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்த எனது கணவரை 2020ஆம் ஆண்டு கைது செய்தார்கள். எனது கணவர் தொடர்பான அனைத்து விவரங்களும் ஏற்கனவே பாதுகாப்புத் தரப்பிடம் இருக்கின்றன. எனினும் விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கம் என்ற போர்வையில் சந்தேகநபராக அவரைத் தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளனர். எனது கணவர் அந்தவிதமான குற்றங்கள் எதுவும் செய்யவில்லை என எனக்குத் தெரியும். குற்றம் செய்திருந்தால் அவர் செய்த குற்றத்தை நிரூபித்து, தண்டனை வழங்குங்கள். 20 மாதங்களுக்கு மேலாக எனது கணவரை காரணமின்றித் தடுத்து வைத்திருப்பதை ஏற்கமுடியாது - என்றார். (வ-20)

## கசிப்புக் காய்ச்சும் இடம் கட்டுவனில் சுற்றிவளைப்பு



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவன் பகுதியில் கசிப்புக் காய்ச்சும் இடமொன்று தெல்லிப்பழைப் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. அங்கிருந்து 1000 லீற்றர் கோடா, 40 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன. இதன்போது அதேபகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-125)

**நாளை** 26.02.2022 சனிக்கிழமை மாசி 14
சுபநேரம் : 03.29 – 04.59
ராகுகாலம்: 09.29 – 10.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனை தாக்கியது ரஷ்யா

- எல்லைகளில் நுழைந்தன பீரங்கிகள்
- ரஷ்யாவுக்கு ஆதரவாக போராளிகள்
- நினையாத நேரத்தில் அமெ. தலையிடும்



மொஸ்கோ, பெப். 25

**உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் கடந்த இரு வாரங்களுக்கும் அதிகமாக ஏற்பட்டிருந்த பதற்றநிலையின் தொடர்ச்சியாக நேற்று உக்ரைன் மீது போர் அறிவிப்பை விடுத்தார் ரஷ்ய அதிபர் புடின். இதையடுத்து உக்ரைனின் தலைநகர், வர்த்தக நகர்கள் உள்ளிட்ட பல இடங்களில் ரஷ்யப் படைகள் தாக்குதலை ஆரம்பித்துள்ளன.**

1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியைக் கண்டபோது, அதில் இருந்து வெளியேறி சுதந்திர நாடாக உக்ரைன் உருவானது. இந்த நிலையில், கடந்த 2014ஆம் ஆண்டு உக்ரைனில் ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதனால் ரஷ்ய ஆதரவு பெற்ற அதிபர் விக்டர் யானுகோவிச் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். இதன்பின்னர் அமெரிக்காவின் ஆதிக்கம் உக்ரைனில் வலுப்பெற்றது. 2014ஆம் ஆண்டின் பின்னர் உக்ரைனை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர ரஷ்யா முயன்று வருகிறது. அதேவேளையில் உக்ரைன் தன்னை ஐரோப்பிய நாடாகவே காட்டிக் கொள்ள விரும்புகிறது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோவில் இணைய முயன்றுவருகிறது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் நேட்டோவில் இணையும் நடவடிக்கையில் உக்ரைன் தீவிரமாக ஈடுபட்டதையடுத்து, அது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று தெரிவித்த ரஷ்யா உக்ரைன் எல்லையில் தன் படைகளை நிறுத்தியது.

உக்ரைனும் தன் நிலையில் இருந்து தளராமல் அமெரிக்க ஆதரவுடன் நேட்டோவில் இணைவதை தொடர்ந்தும் வலியுறுத்தியது. இதையடுத்து உக்ரைனுக்கு எதிராக சரமாரியான குற்றச்சாட்டுக்களை அடுக்கிய புடின், உக்ரைன் எல்லையில் ரஷ்யர்கள் செறிந்துவாழும் டொன்பாஸ் பிராந்தியத்தின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய இரண்டு பகுதிகளையும் தனிநாடுகளாக அறிவித்தார்.

இந்தப் பகுதிகளுக்குள் ரஷ்ய ஆதரவாளர்கள் மற்றும் ரஷ்யாவுக்கு ஆதரவான போராளிகளின் குடும்பங்கள் நகர வேண்டும் என்றும் வலியுறுத்தினார். புடினின் இந்த நகர்வு உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா தாக்குதல் நடத்துவதற்கான ஆரம்பப் புள்ளி என்று கருதப்பட்ட நிலையில், நேற்று அதிகாலை இராணுவ நடவடிக்கையை அறிவித்தார் புடின்.

ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சிப் படைகளால் நிர்வகிக்கப்படுகின்ற டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் இரண்டிலும் ரஷ்யப் படைகள் முகாமிட்டுள்ளதுடன் உக்ரைன் எல்லைக்குள் 20 கிலோமீற்றர் தூரம் ரஷ்யாவின் பீரங்கிகள் அணிவகுத்து நிற்கின்றன என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ம)



## உயிரிழப்புகளுக்கு ரஷ்யாவே பொறுப்பு

### பைடன் மிரட்டல் தொனி

வொஷிங்டன், பெப். 25

உக்ரைன்மீது ரஷ்யா தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில் இதனால் பெரியளவில் மனித உயிர்கள் இழப்பைச் சந்திக்கும். இதற்கு ரஷ்யாவே பொறுப்பாகும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இதையடுத்து வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் பைடன்.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தவுள்ளது என்று பைடன் கடந்த இரு வாரங்களாகவே எச்சரித்து வந்தார், அவ்வாறு ரஷ்யா தாக்குதல் நடத்தினால் புடின் நினைத்தும் பார்க்கமுடியாத வகையில் பெரும்தாக்குதலை அமெரிக்கா மேற்கொள்ளும் என்று பைடன் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஐ.நா. பாதுகாப்புச் சபை கூடியவேளை தாக்குதல்

### கெத்துக்காட்டிய புடின்

மொஸ்கோ, பெப். 25

உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஒன்றுகூடி கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்த வேளையில் உக்ரைன் மீது தாக்குதலுக்கு உத்தரவிட்டார் புடின்.

கடந்த இரு வாரங்களாகவே ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் போர்மேகம் சூழ்ந்திருந்தது. இந்த விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டது. உக்ரைன் மீது தாக்குதல் நடத்தினால் ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று மேற்கத்திய நாடுகள் எச்சரித்தன.

ரஷ்யாவுக்கு அழுத்தத்தை வழங்குவதற்காக கடந்த ஒரு வாரத்தில் மட்டும் மூன்று தடவைகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஒன்றுகூடி இந்த விவகாரம் தொடர்பில் பரிசீலனைகளை மேற்கொண்டது.

நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) ஐக்கிய நாடுகள் சபை ஒன்றுகூடி இந்த விவகாரம் தொடர்பில் பரிசீலனையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே உக்ரைன் மீது போர் அறிவிப்பை விடுத்தார் புடின். (ம)






## எல்லோருமாக இணைந்து புடினைத் தோற்கடிப்போம்

மொஸ்கோ, பெப். 25

உக்ரைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை புடின் அறிவித்துள்ள நிலையில், புடினுக்கும் ரஷ்யாவுக்கும் எதிராகவும் உக்ரைனுக்கு ஆதரவாகவும் அமெரிக்காவிலும் மேற்கத்திய நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்கு முன்பாக உள்ள பிரத்தியேக இடத்தில் ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், 'புடினைத் தோற்கடிப்போம்', 'புடினுக்கு எதிராக ஒன்றிணைவோம், 'பொருளாதாரத் தடைகளைப் பலப்படுத்துங்கள்' உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேபோல், போர் வேண்டாம். அமைதியான முறையில் பேச்சு நடத்துங்கள் என்று வலியுறுத்தி மேற்கத்திய நாடுகளிலும் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### "லீசிங்...

கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
கடந்த செவ்வாய்க்கிழமை 22ஆம்திகதி அந்தப்பகுதியை சேர்ந்த மரியநாயகம்காணிக்கையம்மா ஜெயசீலி (வயது-72) எனும் பெண் அடித்துக்கொலை செய்யப்பட்டு இருந்தார்.
வீட்டு வேலைக்கு வந்த இளைஞனே பெண்ணைகோடாலி பிடியால் அடித்துக் கொலை செய்த பின்னர், அப்பெண் அணிந்திருந்த தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றிருந்தான் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்திருந்தது. இதற்கு அமைவாக பொலிஸார் சி.சி.ரி.வி. காணொலிகளை அடிப்படையாக வைத்து முன்னெடுத்த விசாரணைகளில் சந்தேக நபரைக் கைது செய்தனர்.
அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது,
" எனது மனைவிக்கு மோட்டார் சைக்கிள் லீசிங் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்தேன். அதற்குரிய தவணைப் பணமாக மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா கட்ட வேண்டிய நிலையில் கடன் பெற்று அதனைச் செலுத்திவந்தேன். அப்படி வாங்கிய கடனை திரும்பச் செலுத்துவதற்காக மூதாட்டியைக் கொன்று, அவரின் நகையைக் கொள்ளையடித்தேன்" என்று தெரிவித்துள்ளார். (அ-ஒ-26)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 11 - 1941



மறைவு 08 - 03 - 2021

## சின்னத்தம்பி வல்லிபுரம்

திதி - தசமி

கண்ணிமைத்து விழிக்கவில்லை
ஓர் ஆண்டு சென்று விட்டதையா
ஒரு நொடிப்பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம்
எம்மை விட்டு .............

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.**

கொயிலாமனை,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(CR 7938) (4/6)

### அதி...

துன்னாலையைச் சேர்ந்த கமலராஜா அஜந்தன் (வயது - 18) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
மாலுசந்தியில் இருந்து வதிரிச் சந்தி நோக்கி தனியார் நிறுவன கனரக வாகனம் ஒன்று சென்றுள்ளது. அப்போது எதிர்த்திசையில் அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர், வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால், வாகனத்துடன் சடுதியாக மோதுண்டார். இதன்போது அவர் செலுத்திவந்த மோட்டார் சைக்கிள் சுக்குநூறானதோடு, இளைஞரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்.
உடனடியாக அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்போது வழியில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்த இளைஞனிடம் சாரதி அனுமதிப்பத்திரம்போன்ற ஆவணங்கள் எவையும் காணப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-ஒ-23-26)

### நாடாளுமன்றில்...

வந்துள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.



# மரண அறிவித்தல்

மண்ணில் 14 . 01 . 1950



விண்ணில் 22 . 02 . 2022

## மரியநாயகம் ஜெயசீலி (பூபதி)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் ஜெயசீலி (பூபதி) அவர்கள் கடந்த (22.02.2022) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை நாகம்மா அவர்களின் மகளும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து, அன்னம்மா அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான S. மரியநாயகம் (ராசா) அவர்களின் அன்பு மனைவியும் நிருபா (நோர்வே), பிரசன்னா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திரன் (ரவி - நோர்வே), ஜீன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிவேதா, றூவீன், ஏரிக், அல்வின், சீமோன், மெல்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஞா.லூர்த்தம்மா, துரைராசா, சின்ராசா, யோகராசா, செல்வராசா, லோறன்ஸ் ஞானேந்திரன், பெனடிக்ற், செபமாலையம்மா, புனிதசீலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் இன்று (25.02.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல. 16, இராசாவின் தோட்ட லேன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன் பின் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**

**இல. 16,
இராசாவின் தோட்டஒழுங்கை
யாழ்ப்பாணம்.**

**ரவீந்திரன் (மருமகன்) - 074 272 8337**
**திலீபன் (மருமகன்) - 077 325 1510**

(CS 43136) (3/6)

அதன் பின்னர், அமைச்சர் தினேஷ் குணவர்தன, இவ்வாறான உபகரணங்களால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் எனவும், இதனை அனுமதிக்கக்கூடாது எனவும் சபாநாயகரிடம் தெரிவித்தார். இதனையடுத்து அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் சபை அமர்வு சுமார் 10 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

(அ-ஒ-இ)

### அரசுக்கு...

சங்கடத்தில் ஆழ்த்தும் சதியே வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்து வப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுத்த போராட்டமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
ஜனாதிபதியை சந்திப்பது குறித்து வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னதாக அறிவிக்கவில்லை என அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.
ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை கருத்திற்கொண்டு அரசை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தும் சதியாகவே இந்த சம்பவத்தை பார்க்க முடியும் என அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

(அ-ஒ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்களால் பயன் அடைந்தவர்கள் நன்றி பாராட்டுவர். குழந்தைகளால் ஏற்பட்ட சங்கடம் தீரும். வியாபாரம் சூடு பிடிக்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். சிறிய இலாபம் வரும்.

**இடபம்:** பேச்சில் கவனம் தேவை. வீட்டில் சிறு மாற்றம் செய்வீர்கள். பிறரிடம் பேசும் போது சொற்களை கவனமாகக் கையாளவும். பிடிவாதப் போக்கை மாற்றிக் கொண்டு பலன் அடைவீர்கள்.

**மிதுனம்:** முன்பு பகைத்துக் கொண்டவர்கள் உதவ முன்வருவார்கள். பணியில் வளர்ச்சி காண்பீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டும்.

**கடகம்:** வருமானம் ஓரளவுக்குத் திருப்திகரமாக இருக்கும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். கூடுதலாக உழைத்தால் உயர்ந்த நிலையை அடையலாம்.

**சிம்மம்:** முன்பு இழந்த நன்மை ஒன்று மீண்டும் கிடைக்கும். பெரியோரை அனுசரித்து சென்று அவர்களது ஆசியைப் பெறுவீர்கள். நீண்டகாலக் கனவு ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சி இரட்டிப்பாகும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை கூடும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டியநாள். சோர்வடைய வேண்டாம். முயற்சியைக் கைவிடுங்கள்.

**துலாம்:** முயற்சியில் இருந்த தாமதம் நீங்கும். நட்புவட்டம்விரியும். உறவினரிடம் மனக்கசப்பு வராமல் கவனமாக இருங்கள். நேற்று எடுத்த முடிவை இன்று தலைகீழாய் மாற்றுவீர்கள். பிற்பகலுக்கு மேல் பிரச்சினைகள் குறையும்.

**விருச்சிகம்:** கடன் விவகாரங்களை ஒழுங்கு செய்து நிம்மதி பெறுவீர்கள். நல்ல செய்தி வரும். இன்று முக்கிய முடிவு எடுப்பீர்கள். இன்று ஏற்படும் பிரச்சினைகளை எளிதாக சமாளிப்பீர்கள்.

**தனுசு:** மாணவர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். நண்பர்களின் செயல்களால் பெருமிதம் கொள்வீர்கள். பணியாளர்கள் நன்மை காண்பர். பொறுமை தேவை.

**மகரம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். சகபணியாளர்களிடம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டாம். குடும்ப வருமானம் உயரும்.

**கும்பம்:** மேலதிகாரிகளின் ஆணை உங்களுக்கு நன்மையாக முடியும். வாழ்க்கைத்துணைக்கு நல்ல செய்தி வரும். மகிழ்ச்சி கூடும். கூடுதல் நன்மை கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும்.

**மீனம்:** நெருங்கிய நண்பர்களால் சந்தோஷமான செலவுகள் உண்டு. பிறர் மீதுள்ள சந்தேகங்கள் அகலும். நிம்மதி அதிகரிக்கும். யார் மீதும் வழக்கு தொடுக்க வேண்டாம். வருமானம் உயர ஆரம்பிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள 'ஒளிரும் வாழ்வு' என்ற மாற்றுத்திறனாளி அமைப்பின் 60 உறுப்பினர்களுக்கு, கனடா வாழ் றஜீவன் தாட்சாயிணி தம்பதியினரின் நிதிப்பங்களிப்பில் மதிய போசனம் வழங்கப்பட்டதுடன் செல்வேந்திரன் சாந்தி என்ற மாற்றுத்திறனாளிக்கு ஒருசோடி கிளச்சரும் நேற்றையதினம் வழங்கி வைக்கப்பட்டது. (ய-13)





சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் வழிநடத்தலில் கலைமகள் முன்பள்ளி மாணவர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் வரலாற்று, ஆன்மிகத் தலங்களுக்கு கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர். (ய-125)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நட்பு ரீதியான வலைப்பந்தாட்டப் போட்டி யாழ்.512 ஆவது படையணியின் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-23)






மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள மீள்குடியேற்ற கிராமமான கணேசபுரம் சேவா கிராமத்தில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் உலர் உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப் பட்டன. (ய)



வல்வெட்டித்துறை வீதியில் அண்மையில் இராணுவத்தினரால் பணப்பையொன்று மீட்கப்பட்டிருந்த நிலையில் அந்தப் பணப்பை உரியவரிடம் பொலிஸார் முன்னிலையில் வைத்து நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது. (ரி1-20)



கிளிநொச்சி, பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

பூநகரி பிரதேசசபையின் 2021ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்ட நிதியில் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கே ஊர்க் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-13)



# மட்டக்குளியில் கஞ்சாவுடன் படகு மீட்பு ஒருவர் கைது

கொழும்பு, பெப். 25

மட்டக்குளியில் ஒரு தொகை கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரை கடற்படையினரின் உதவியுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அத்துடன் 3 படகுகளையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

வெளிநாடு ஒன்றிலிருந்து நீர்கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு பின் மட்டக்குளிக்கு படகு மூலம் கடத்தப்படவிருந்த நிலையிலேயே 400 கிலோ நிறையுடைய கஞ்சாப் பொதி கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ச-இ)



வடமாகாண அரச திணைக்களங்களின் நடமாடும் சேவை வவுனியா பரகும் மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. குறித்த நடமாடும் சேவையில் அதிகளவான பொதுமக்கள் கலந்துகொண்டு, தமது பிரச்சினைகளை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ய-110)

## சொகுசுக் காரில்

# கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைதாகினர்



கொழும்பு, பெப். 25

அம்பாறை கல்முனை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பெரிய நீலாவணைப் பகுதியில் கேரளக் கஞ்சாவை அதி சொகுசு காரில் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவையில் இருந்து பொத்துவில் நோக்கிப் பயணம் செய்தபோதே குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 10 கிலோவுக்கும் மேற்பட்ட தொகையுடைய கஞ்சாப்பொதிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார நிலையப் பணிப்பாளர் யாழ். பல்கலைக்குப் பயணம்



யாழ்ப்பாணம், பெப். 25
இந்தியத் தூதரகத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி றிவான்ட் விக்ரம் சிங் மற்றும் யாழ். பல்கலைக்கழக பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது.
கலாநிதி றிவான்ட் விக்ரம் சிங் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மேற்கொண்ட பயணத்தின் தொடர்ச்சியாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

(ம-ரி1-20-27)

## இராசதானியின் தோரணவாசல் சீரமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ்ப்பாண மரபுரிமை மையம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் இராசதானியின் தோரணவாசலை சீரமைப்புச் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.
இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம், உபதலைவர் பேராசிரியர் ரவிராஜ் ஆகியோரின் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

(ம-ரி1-20-27)

*யாழ்...*
கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 823 குழந்தைகள் பிறந்துள்ளன. தாயின் கருவில் 28 வாரங்களின் பின்னர் 46 சிசுக்கள் உயிரிழந்துள்ளன. பிறந்து 7 நாள்களுக்குள் 39 குழந்தைகள் உயிரிழந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (அ-125)

*போராட்டம்...*
நேற்று ஈடுபட்டனர்.
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவர் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களை நேற்றுச் சந்தித்த உறவினர்கள் வடமாகாண ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பாக தெரிவித்ததுடன்



உணவு தவிர்ப்பு போராட்டத்தை நிறைவுக்கு கொண்டுவருமாறு வலியுறுத்தினர்.
இந்நிலையில் நியாயம் கிடைக்கும் வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிடமாட்டோம் என கைதிகள் தெரிவித்ததையடுத்து உறவினர்களும் அவர்களுக்கு ஆதரவாக வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ஒ-20)

*22 இந்திய...*
நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவிட்டார். அத்துடன் இந்திய மீனவர்களின் படகில் இருந்து கைப்பற்றப்பட்ட மீன்களை ஏல விற்பனை செய்து, அதன் பணத்தை மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் இதன் போது கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்தார். (அ-ஒ-23-26)




## தேவை

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
**முகாமைத்துவ உதவியாளர் (பெண்)** கணினி அறிவு பரிசீலிக்கப்படும் **பாதுகாப்பு ஊழியர் (பெண்)**

ஆடியபாதம் வீதி, (சந்தை அருகில்) திருநெல்வேலி. தொடர்பு:- 077 386 7458, 021 221 6933

(CS 18508) (4/6)


## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 01 . 1955 — மறைவு 24 . 02 . 2022

### லயன் கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம்

(காரை மணிகண்டன், காரைநகர் சமாதான நீதவான்களுக்கான அமைப்பின் பிரதேசசபை அமைப்பாளர்)

காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் இல77 இராஜவீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம் நேற்று (24.02.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை(C.T.B) நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜலட்சுமியின் அன்புக்கணவரும் சுபதினி, சுகீவன்(சுவிஸ்), சுபஜா, சுபந்தா(அமரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மயூரன், கேசவன்(துவாரகா நகைமாடம்), ஆகியோரின் அன்பு மாமனாரும் பாணுஷா, நிதுஜன், டிஜேஷ், மதுசனா, இலக்கியன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திரு. கனகர் இராசையா

ஐயனார் கோவிலடி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகர் இராசையா அவர்கள் நேற்று (24.02.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும், றயனி, சுரேஸ்குமார் (பிரதம பொறியியலாளர் - மாநகரசபை, யாழ்ப்பாணம்) ரவிக்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பூநகரி பிரதேச செயலகம்), சதீஸ்குமார் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் கமநல அபிவிருத்தி திணைக்களம், நல்லூர்), கவிக்குமார் (கொமர்ஷியல் வங்கி அச்சுவேலி கிளை), ஆகியோரின் பாசமிகு தந்தையும், வேல்தஞ்சன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மாகாண காணி திணைக்களம்), விதூஸனி (பதவி நிலை தொழில்நு ) உத்தியோகத்தர் - யாழ் மருத்துவ பீடம்), விஜயலதா, சுபானந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தெல்லிப்பழை பிரதேச செயலகம்) வாசுகி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தென்னை பயிர்ச்செய்கை சபை - பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பொன்மகள் (மாணவி - யாழ் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனம்), கிருஸ்ணகிஷோர் (மாணவன்- ரஜரட்டை பல்கலைக்கழகம்), வேணுசாயினி (மாணவி - யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கேதுஷா, கேனிஷா, யக்சலன், ரேஜிகன் பர்னிஸ், லோகலக்ஷன், ரக்சிதா, சத்யகன், சாதுஜன் ஆகியோரின் அருமை பேரனும், தியாகராசா, காலஞ்சென்ற நாகராசா மற்றும் சின்னத்துரை, வீரசிங்கம், நன்னித்தம்பி, தவமணி, இராசமணி, நடராசா ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற சிவராசா, மகேஸ்வரி, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் இந்திராதேவி, காலஞ்சென்ற தேவராசா மற்றும் தவமலர்தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (24.02.2022) வியாழக்கிழமை நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம் .

077 413 6193
077 899 6136

தகவல்: **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 12 . 1937



மறைவு 23 . 02 . 2022

## அமரர் இராமலிங்கம் அம்பலவாணர்

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு கொயிலாமனை கொடிகாமத்தை வசிப் பிடமாகவும் கொண்ட முன்னைநாள் ஓய்வுபெற்ற கிராமசேவையாளரும், தற்போதைய அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய அமரர் இராமலிங்கம் அம்பலவாணர் அவர்கள் 23.02.2022 புதன்கிழமை அதிகாலை 5. 00 மணிக்கு இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் செல்லாச்சி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், வடிவேலு, காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற தெய்வநாயகியின் அன்புக் கணவரும், பவானி, பாராளன், சிவதாசன், சிவகுமாரி, சிவசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், குணராசசேகரம், பானுமதி, பவானி, ராஜன், மொறைஸ் ஆகியோரின் மாமனாரும், கிஷாந், சதீஸ், தமிழினி, நிவீதன், நிரஞ்ச், காவியா, துஷானி, டிலக்சன், கிருசாந் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.24, 1ஆம் குறுக்கு வீதி சங்கத்தானை என்ற முகவரியில் நடைபெற்று, பூதவுடல் 25.02.2022 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


தகவல்
மகன் (சிவா)

077 718 3653, 071 867 1179 (CR 37140) 3/7)

# மரண அறிவித்தல்

நல்ல போராட்டத்தை போராடினேன்,
ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக்
காத்துக்கொண்டேன்
2 தீமோத்தேயு 4 : 7

தோற்றம் 24 . 11 . 1964



மறைவு 23 . 02 . 2022

## திரு. வேலுப்பிள்ளை சிவகுமார்

(முன்னாள் சாரதி, UNDP, Unicef, FORUT)

ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை சிவகுமார் நேற்று முன்தினம் (23.02.2022) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் தவமணி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சின்னமணி தம்பதியரின் மூத்த மருமகனும், செல்வ றஞ்சிதத்தின் அன்புக் கணவரும், டேவிட் அனோஜன் (சென்.ஜோண்ஸ் கல்லூரி பழைய மாணவன்), டேவிட் அபிநயன் (சென்.ஜோண்ஸ் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற புஸ்பரஞ்சினி, ஜெயக்குமார் (ஆசிரியர் - இராமநாதன் கல்லூரி - யாழ்ப்பாணம்), ஜெயகௌரி (ஆசிரியர் - உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை), காலஞ்சென்ற உதயகுமார், சுகந்தினி (சுவிஸ்) மற்றும் றாஜினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பான சகோதரனும், ஆனந்தபாஸ்கரன் (ஓய்வுபெற்ற பரிசாரகர் - ஆதாரவைத்தியசாலை - தெல்லிப்பழை), கௌரி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - காரைநகர்), முகுந்தன் (யாழ். மாநகரசபை - நீர் வேலைப் பகுதி), நாகலோசன் (சுவிஸ்), குகபாலா (அமெரிக்கா), காலஞ்சென்ற ஜெயசீலன் (முன்னாள் ஆசிரியர் - (சென்.ஜோண்ஸ் கல்லூரி), செல்வறஜனி, புஸ்பலதா, பிறேமலதா (பிரான்ஸ்), பிறேமசீலன் (உதவி நூலகர் - யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு மைத்துன னும், பிரதீபன் (கனடா), நிஷாந்தி, ஆகாஷ் (சுவிஸ்), ஆர்த்திகா (சுவிஸ்), லக்ஷனியா (அமெரிக்கா), பிறிசில்லா ஜெனீபர் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷாத்ராக், மேஷாக், ஏஞ்சலின் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.02.2022) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
077 143 5712
077 691 1051

242/4, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம். (cs.18445) (2.6)

# சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் அறிவித்தல்

## குடியியல் நடைமுறைக்கோவையின் இல.16 பிரிவு இன் கீழான அறிவித்தல்

நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தின் பிரிவு 112 இன் கீழான விண்ணப்பம்

காங்கேசு செல்லத்துரை விக்னராஜா
மீசாலை மேற்கு, மீசாலை தற்போது இல:
30/1B1, Longdon Place, Malalasekera Mawatha, Colombo 07

- மனுதாரர்

**வழக்கு இல: நம்பிக்கைச்சொத்து /36/2021**

இந் நீதிமன்றத்தில் மேற்குறித்த மனுதார் நம்பிக்கைச்சொத்து சட்டத்தின் 112ம் பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று இதன்பின் காணும் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்களை மேற் குறித்த மீசாலை மேற்கு, மீசாலை கிராமசேவகர் பிரிவு J/319 பிரிவுக்குட்பட்ட "தேற்றாவடி" என்ற ஆதனத்தில் எழுந்தருளியிருக்கும் கரும்பிமாவடி கந்தசாமி கோயில் சார்பில் சென்றடைதற் கட்டளைக்கு விண்ணப்பித்துள்ளபடியால் எவராவது ஆட்சேபனை ஏதுமிருப்பின் இந் நீதிமன்றில் 2022ம் ஆண்டு சித்திரை மாதம், 25ந் திகதி காலை 09.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தோன்றி தெரிவிக்கு மாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**2022ம் ஆண்டு மாசி மாதம் 22ந் நாளாகிய இன்று**

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

வரைபு:
மனுதார் சட்டத்தரணி

**ஆதன அட்டவணை 'அ'**

வடமாகணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மீசாலை இறை "பன்றிக் கேணி வளவு" நிலப்பரப்பு 16 பதினாறுக்கும் எல்லை **கிழக்கு:** கணபதிப்பிள்ளை பொன்னையாவுக்கு தற்போது நடேசன் பெண் பூமணிக்குரிய ஆதனம், **வடக்கு:** றோட்டு, **மேற்கு:** இராமு கந்தையாவின் பிள்ளைக்குமுரிய ஆதனம், **தெற்கு:** மீசாலை தெற்கு தேற்றாவடிக் கந்தசாமி கோவிலுக்குரிய ஆதனமும் மறுவும், இவ்வெல்லைக்குட்பட்ட காணிக்குள் நிற்கும் தென்னைகள், பனைகள், பலாமரங்கள் முழுவதும்.

**ஆதன அட்டவணை ஆ**

மேற்படி இறை **"இராமன் கேணி"** நிலப்பரப்பு 11 3/4 தற்போதைய அளவின் படி நிலப்பரப்பு 12 குளி 06 இந்த நிலப்பரப்பு பன்னிரண்டு குளி ஆறுக்கும் எல்லை **கிழக்கு:** நடேசன் பெண் பூமணிக்குரிய ஆதனம், **வடக்கு:** மேற்சொல்லிய 01ம் காணியும் இராமு கந்தையாவுடைய ஆதனமும், காலஞ்சென்ற செல்லப்பா பொன்னம்பலம் சாமிநாதனுடைய உரிமைக்காரரின் ஆதனங்கள், **மேற்கு:** மூத்ததம்பி பெண் நல்லதங்கத்துக்கும் சிவசம்புதளையசிங்கத்துக்முரிய ஆதனாங்கள், தெற்கு: வேலுப்பிள்ளை மகள் இராசபூபதிக்கும் கந்தையா சுப்பிரமணியத்திற்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் இவ்வெல்லைக்குட் சேர்ந்த நிலம் பயிர் அடங்கலும் இதைச் சேர்ந்தவைகள் அனைத்தும்.

**ஆதன அட்டவணை "இ"**

மேற்படி இறை **"இராமன் கேணி"** நிலப்பரப்பு 08 எட்டும் குளி 06 ஆறும் எல்லை **கிழக்கு:** சுப்பிரமணி யம் பாலனுக்குரிய ஆதனம், **வடக்கு:** நடேசன் பெண் பூமணிக்குரிய ஆதனம், **மேற்கு:** கந்தையா சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம், **தெற்கு:** சோமசுந்தரம் பெண் காசிப்பிள்ளைக்கும் சிவகுருவுக்குமுரிய ஆதனாங் கள், இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

**ஆதன அட்டவணை "ஈ"**

மேற்படி இறை "தேற்றாவடி" நிலப்பரப்பு 15 1/2 பதினைந்தரை **இதற்கெல்லை கிழக்கு:** இக்காணியால் விடப்பட்ட நான்கு முள அகல ஒழுங்கையும் பொன்னையா ஆறுமுகத்திற்குரிய ஆதனமும் வடக்கும் **மேற்கும்:** றோட்டு, **தெற்கு:** இராமநாதன் பெண் நவரத்தினதேவிக்கும் இளையதம்பி விஜயரத்தினத்திற்குமுரிய ஆதனங்கள் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பலா, மா, தென்னை, பனை மரங்களும் இரண்டு கிணறுகளும், கரும்பிமாவடிக் கந்தசாமி கோவிலும் இதடங்கலும்.

**ஆதன அட்டவணை "உ"**

மேற்படி இறை "பனையடி வயல்" நெற்பரப்பு 08 எட்டு இதற்கெல்லை **கிழக்கு:** தம்பன் கணவதி குலவீர சிங்கத்துக்குரிய ஆதனம், **வடக்கு:** கதிரித்தம்பி விசாலட்சிக்கும் மறுபேருக்கமுரிய ஆதனம், **மேற்கு:** மட்டுவில் முருகமூர்த்தி கோவிலுக்குரிய ஆதனம், **தெற்கு:** றோட்டு, இவ்வெல்லைக்குட்பட்ட வயல் நிலம் முழுவதும்.

**ஆதன அட்டவணை "ஊ"**

மேற்படி இறை பனையடி வயல் நெற்பரப்பு 02 இரண்டுக்கும் எல்லை **கிழக்கு:** தம்பிப்பிள்ளை தாமோதரம்பிள்ளையின் உரிமைக்காரருடைய ஆதனம், **வடக்கு:** மட்டுவில் கண்ணகை அம்மன் கோவிலுக்குரிய ஆதனம், **மேற்கு:** மூத்ததம்பி கனகலிங்கத்துக்குரிய ஆதனம், **தெற்கு:** அருணாசலம் பொன்னையாவுக்கும் செல்லையாவுக்குரிய ஆதனங்கள், இவ்வெல்லைக்குட்பட்ட வயல் நிலம் முழுவதும்.

நிதீமன்றின் கட்டளைப்படி,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

(cs.43148) (2.6)

# மரண அறிவித்தல்



## ஐயாத்துரை மகாதேவா

யாழ்.இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் தலையாளியில் வசித்தவருமான ஐயாத்துரை மகாதேவா அவர்கள் கடந்த 21.02.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை சின்னம்மா தம்பதிகளின் மகனும், மண்டைதீவு, 6ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், சுந்தரநாயகியின் அன்புக்கணவரும், மகாலட்சுமி, சகாதேவா, வாமதேவா, விஜயலட்சுமி, சிவதேவா, ஞானதேவா ஆகியோரின் சகோதரரும், மங்களநாயகி, நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (22.02.2022) செவ்வாய்க்கிழமை கோண்டாவில் கலைவாணி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை கோண்டாவில் டிப்போ சந்தியடியில் உள்ள இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சுந்தரநாயகி (மனைவி) 077 899 6670
நாகரத்தினம் (மைத்துனர்) 077 444 8760


கலைவாணி வீதி,
கோண்டாவில்.

(CS 18512) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 10 . 06 . 1982



ஆண்டவன் அடியில் 08 . 03 . 2021

அமரர்

## ஸ்ரீஸ்கந்தராஜா பகீரதன்

ஆண்டொன்று உருண்டாலும்
தெய்வத் திருவுருவாய் தினமும் வழிகாட்டியாய்
யாரும் மறந்திடாமல் எவருக்கும் இனியவராய்
நித்தமும் எமை நினைக்க வைக்கும் நித்திலமாய் நீயிருக்க
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CR 7936) (4/6)

# 20ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை அருகில் 20 - 12 - 1935



ஆண்டவன் அருகில் 07 - 03 - 2002

## அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

திதி : நவமி (25.02.2022)

பாசத்தின் உறைவிடமே !
பண்பின் ஒளிவிளக்கே !
அல்லும் பகலும் அயராது உழைத்து
அற்றார்க்கும் உற்றார்க்கும்
உதவிடும் உத்தமனே!
ஆறுதல் சொல்ல ஆண்டவன் வந்தாலும்
உங்களிற்கு ஈடாகுமா?
தசாப்தம் இரண்டு கடந்தாலும்
தவிக்கின்றோம் உமைப்பிரிந்து
நீல கடலும் நீள் வானம் உள்ளவரை
நினைவழிய மாட்டீர்கள் அப்பா.

சங்கத்தானை,
சாவகச்சேரி

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 01 . 1928



இறப்பு 24 . 02 . 2022

## செல்லப்பா அரியரத்தினம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா அரியரத்தினம் நேற்று (24.02.2022) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - ஆச்சிமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரி அரியரத்தினம் அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சத்தியவல்லி நடராசா அவர்களின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2022) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 323 1584

(cs 43145) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 10 - 1955



மறைவு 24 - 02 - 2022

## திரு. இராஜபட்சம் விஷ்வபட்சம்

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் மூளாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட திரு. இராஜபட்சம் விஷ்வபட்சம் (முன்னாள் முகாரி கனரக வாகன பராமரிப்பு பகுதி, லங்கா சிமெண்ட் நிறுவனம், காங்கேசன்துறை) அவர்கள் நேற்று (24.02.2022) இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜபட்சம் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், அரியரத்தினம் சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மருமகனும், ஈஸ்வரபட்சம், ரங்கபட்சம், ருத்ரபட்சம், வாமனதேவி சுலோஜனாதேவி, இராஜினிதேவி, யாழினிதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும், காந்தவிஷ்வன், விஜிகலா அவர்களின் அன்புத் தந்தையும், மகாலிங்கசிவம், சுதாமதி அவர்களின் மைத்துனரும், புஸ்பராணி அவர்களின் அன்பு கணவரும், பிரம்மன், பார்த்தீபன், ஹரிதாஸ், தர்ஷனா, சிந்துஜா, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனும், உமேஷ், நிஷான் அவர்களின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2022) வெள்ளிக்கிழமை மூளாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனகிரியைக்காக பித்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்
மனைவி, மகன், மகள்
077 060 7757

(CS 18551) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள் மற்றும் பதநீர் உற்பத்திப் பயிற்சி

பனை அபிவிருத்திச் சபை, தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து NVQ தரம் 3க்கான கள் மற்றும் பதநீர் பயிற்சிநெறி நடாத்தப்படவிருக்கின்றது.

இணைந்துகொள்ள விரும்புவோர் உடனடியாக உங்கள் சுயவிபரம் அடங்கிய, தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.



- பயிற்சிக் காலம்: 3 மாதங்கள்.
- தேர்ந்த பயிற்றுனர்களால் பயிற்சி அளிக்கப்படும்.
- பாதுகாப்பான முறையில் பயிற்சி நடாத்தப்படும்.
- பயிற்சி முடிவில் NVQ தரம் 3 சான்றிதழ் வழங்கப்படும்.

03.03.2022ம் திகதிக்கு முன்னர் பயிற்சிநெறிக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
தலைவர் / பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்
021 222 2034 / 021 221 5018 / 077 435 2468


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:- 09.06.1938
மறைவு :- 24.02.2022

யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு.இ.சதீஸ்குமார்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் கனகர் இராசையா**

அவர்கள் நேற்று (24.02.2022) அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 18514) (4/6)

**உத்தியோகத்தர் நலன்புரி சங்கம், கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்.**

## விசேட பொதுக் கூட்டமும், பொதுக் கூட்டமும்

### விசேட பொதுக்கூட்டம்

கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பிரமாண திருத்த விடயமாக விசேட பொதுக்கூட்டம் 05.03.2022 மாலை 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெற உள்ளது. இப் பிரமாண திருத்தங்கள் பத்திரிகை விளம்பரம் ஊடாக 20.08.2021 அங்கத்தவர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனை விசேட பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

### பொதுக்கூட்டம்

- 26.03.2022 மாலை 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும்.
- மேற்குறிப்பிட்ட பொதுக்கூட்டம் மற்றும் விசேட பொதுக்கூட்டத்தில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயத்தின் அங்கத்தவர்கள் மட்டும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
- பங்கு பற்றும் அங்கத்தவர்கள் அங்கத்துவ அட்டையை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 5-6 மணிவரை ஆலய மண்டபத்தில் நிர்வாக சபையிடம் பெற்றுக்கொள்ளவும்.

**செயலாளர்
கிருபாகர சிவசுப்பிர மணிய சுவாமி கோவில், கொக்குவில்.**

(CS 18509) (4/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 . 05 . 1950



மறைவு 26 . 01 . 2022

**அமரர் அரியகுட்டி கணபதிப்பிள்ளை**
**திதி: நவமி**

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (25.02.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், மலர்வளையங்கள், பதாகைகள் சாத்தியும் அஞ்சலி செலுத்திய எம் அன்புக்குரிய உற்றார், உறவினர் நண்பர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதியாத்திரையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிக் காணிக்கைகளை சமர்ப்பிக்கின்றோம்.

**தேவாலய வீதி,
சங்கானை.** (cs.18450) (2.6)

**சதீஸ்கரன் சுஜிந்தா**
**(ஆசிரியர்- அருணோதயாக் கல்லூரி)**


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 50 ரூபாய்

077 334 1281


## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி.க.வாசுகி அவர்களின் அன்பு மாமனார்

**அமரர் கனகர் இராசையா**

அவர்கள் 24.02.2022 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 18513) (4/6)

**ஊழியர் நலன்புரி சங்கம், யாழ்ப்பாண பிராந்தியக்காரியாலயம், தென்னைப் பயிர்ச்செய்கை சபை, பளை - கிளிநொச்சி**

## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர்ப்பூக்கள்



திருவாசகத்தை தனக்கே உரிய பாணியில் இசைத்து அனைத்து அடியவர்களையும் இறைவன் பால் ஈர்ப்பதற்கு நெறி வகுத்து வந்த சுழத்துச்சிதம்பர ஆதீன கர்த்தாவான **அமரர் முருகேசு சுந்தரலிங்கம்** அவர்களது இழப்பு சைவ உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா எல்லாம்வல்ல தில்லைக்கூத்தன் குஞ்சிதபாதம் சேரப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்- யாழ்கிளை (CR 7939) (4/6) நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 02 . 1937



மறைவு 24 . 02 . 2022

**மேரி பிலோமினா வில்பிறட்**

கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கரம்பொன், யாழ்ப்பாணம் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி பிலோமினா வில்பிறட் (24.02.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ம.யோசவ் வில்பிரட் (கல்யாணி பன்சி யாழ்ப்பாணத்தின் ஸ்தாபகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிறிஸ்தோத்திரம் விக்ரோறியா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற ச.ம.மனுவிற்பிள்ளை பொன்றோஸ் தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்லமணி, காலஞ்சென்ற ஜெரோம் பவளம் (பிரான்ஸ்), அமிர்தநாதன் ஆகியோரின் சகோதரியும், வசீகரன் (லண்டன்), மேரி அசம்ரா (றதி-யாழ்ப்பாணம்), வின்சென்ற் (தயாபரன்-சில்லாலை), கலிஸ்ரா (ரஞ்சினி-பிரான்ஸ்), பொன்றோஸ் (பொன்னு-நோர்வே), லோறன்ஸ் (பாஸ்கரன்-கனடா), தனிநாயகம் (சிறி-இந்தியா), ஆகியோரின் அன்புத்தாயாரும், யசிந்தா (லண்டன்), ஜெயராஜ் (கல்யாணிபன்சி-யாழ்ப்பாணம்), அற்புதலீலா (சில்லாலை), பாலக்குமார் (பிரான்ஸ்), சத்தியபால் (கெல்மன்-நோர்வே), சாந்தி (கனடா), செல்வி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும், வினோசினி, வினோசிபன், பிரியா, டினோத், கெவின், ஜோவித்தா, அஸ்வின், ஜெனிற்ரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.02.2022) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு அப்பன் பாசத்தோட்டம் அல்பேட் வீதி, அச்சுவேலி தெற்கில் உள்ள இல்லத்தில் இருந்து காலை 8.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு புனித சூசைமாமுனிவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அதன் பின்னர் அங்குள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் (பாஸ்கரன்)
074 271 9649 (CS 18515) (4/6)

தகவல்:
குடும்பத்தினர்.

### 5 மணித்தியாலம் ...

கொள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஒரு சில வலயங்களுக்கு 4 மணித்தியாலங்கள் 40 நிமிடங்களும் ஏனைய வலயங்களுக்கு 5 மணி 15 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(அ-ஒ-இ)

### தந்தையுடன்...

சென்று கொண்டிருந்த ரயில் மோதியதில் இளம்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொக்குவில் பிறவுண் வீதியைச் சேர்ந்த ராஜ்குமார் ஜெயந்தி (வயது-23) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொக்குவில் இறைச்சிக்கடைக்கும் புகையிரத நிலையத்துக்கும் இடையிலான ரயில் தண்டவாளத்தை உயிரிழந்த பெண்ணின் தந்தை முதலில் கடந்துள்ளார். அவர் துவிச்சக்கர வண்டியைத் தூக்கிக் கொண்டு கடந்து சென்றுள்ளார். அவரைப் பின்தொடர்ந்து சென்றபோதே ரயில் மோதி இளம்பெண் உயிரிழந்துள்ளார். ரயில் வந்த சத்தம் தமக்குக் கேட்கவில்லையெனவும், அதனாலேயே தனது மகள் ரயில் வருவதை அவதானிக்கவில்லை என்றும் தந்தை விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-20-23-26-27-125)

### பாலின்...

தெரிவித்துள்ளது.

பால் உற்பத்தியாளரின் செலவை ஈடு செய்யும் முகமாக பாலின் கொள்விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே விற்பனை விலையும் அதிகரித்துள்ளது என்று அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

(அ-ஒ-ரி)

### எரிவாயு...

நங்கூரமிட்டுள்ளதாகவும் இவற்றுக்கான டொலரை விடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் மீண்டும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படலாம் என்று லிட்ரோ காஸ் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

6 ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயுவை விடுவிப்பதற்கு 1.2 மில்லியன் அமெரிக்க டொலரை மத்திய வங்கி விடுவிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உக்ரேன்...

இறங்கும் என்று பிரிட்டன் பிரதமர் அறிவித்துள்ளார். அத்துடன் ஐரோப்பிய நாடுகள் பலவும் உக்ரைனுக்கு ஆதரவாக உள்ளன.

இதற்கிடையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைனின் கிழக்கில் உள்ள படையினரை ஆயுதங்களைக் கைவிட்டுப் பின்வாங்குமாறு எச்சரித்திருக்கிறார். தனது நடவடிக்கையில் வெளிச் சக்திகள் தலையிட்டால் வரலாற்றில் சந்தித்திராத பதிலடி கிடைக்கும் என்றும் அவர் மிரட்டல் விடுத்துள்ளார். இதற்கு, ரஷ்யாவிடம் சரணடைய மாட்டோம் என்று உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி திட்டவட்டமாக பதிலடிகொடுத்துள்ளார்.

**முன்னேறிப்பாயும் படைகள்**

இதேவேளை - நேற்றிரவு வரையிலான நிலவரப்படி, உக்ரைனின் முக்கிய இராணுவ இலக்குகளை மட்டும் நவீன ஏவுகணைகளால் தாக்கி அழித்தபடி ரஷ்யப் படைகள் மிக வேகமாக நாட்டின் தெற்கு நோக்கி முன்னேறி வருகின்றன என்று சர்வதேச ஊடகங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

தாக்குதல் ஆரம்பித்து 24 மணிநேரத்துக்குள் ரஷ்யப் படைகள் உக்ரைனின் தலைநகர் கீவ் அமைந்துள்ள பிராந்தியத்தின் எல்லைப்பகுதியை அண்மித்துவிட்டன என்று செய்தி வெளியாகியிருக்கிறது. பெலாரஸ் நாட்டில் இருந்து நுழைந்த ரஷ்யப் படை அணி ஒன்று கிராட் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியவாறு முன்னேறி கீவ் பிராந்தியத்தின் விளிம்பில் உள்ள ஹொஸ்டோமெல் விமானத் தளத்தை நெருங்கியுள்ளது. அந்தப்பகுதியில் கடும்சண்டை மூண்டுள்ளதாகவும் அடையாளம் தெரியாத ஹெலிகொப்ரர்கள் சில வான்பரப்பில் தென்படுவதாகவும் ஏ.எவ்.பி செய்தி தெரிவிக்கிறது.

ஹொஸ்டோமெல் விமான நிலையம் உக்ரைன் இராணுவத்தின் பிரதான வான் தளமாகவும் விளங்குகின்றது. அந்தத் தளம் ரஷ்யப் படைகள் வசம் வீழ்ந்தால் அது உக்ரைனுக்குப் பெரும் இராணுவப் பின்னடைவாகவும் கீவ் நகருக்கு அச்சுறுத்தலாகவும் மாறும்.

**50 பொதுமக்கள் சாவு!**

இதேவேளை - இதுவரையான தாக்குதல்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட சிவிலியன்கள் உயிரிழந்துள்ளனர் என்று உக்ரைன் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

**உக்ரைன் பதிலடி**

சுட்டு வீழ்த்தப்பட்ட ரஷ்யக் ஹெலிகொப்டர் ஒன்றின் வீடியோ காட்சி சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ளது. ரஷ்யாவின் ஆறு விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருப்பதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது. ஆனால் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் இதனை மறுத்துள்ளார். தமது ஒரு விமானம், விமானியின் தவறு காரணமாக வீழ்ந்து நொருங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**மக்கள் அந்தரிப்பு**

இதேவேளை - நேற்றுக் காலை முதல் உக்ரைன் தலைநகர் கீவில் இருந்து பெரும் மக்கள் இடம்பெயர ஆரம்பித்துள்ளது. வெளியேறிச் செல்வோரது வாகன அணிகளால் பிரதான தெருக்களில் மிகப் பெரும் நெரிசல் நிலைமை காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எங்கே செல்வது என்ற முடிவு தெரியாமலேயே பலரும் தலைநகரை விட்டுத் தற்காலிகமாக வெளியேறிச்செல்கின்றனர். அவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் மேற்கே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை நோக்கியே படையெடுத்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

ரஷ்யாவுக்கு எதிராக மேற்கு நாடுகள் விதித்த தடைகள் போதுமானவையாக இல்லை என்ற விமர்சனங்களுக்கு மத்தியில் நேட்டோ நாடுகளின் தலைவர்கள் இன்று வெள்ளிக்கிழமை அவசரமாகக் கூடுகின்றனர். கூட்டாக எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகளை அங்கு அவர்கள் தீர்மானிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உக்ரேனுக்கு உதவி வழங்குவது தொடர்பாக உக்ரேன் அதிபர் வொலோடிமிர் ஸெலென்ஸ்கியிடம் கலந்துரையாடியதாக பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## எமது...

மன்றத்தினுள்ளும், ஜனாதிபதி செயலகம் எதிரிலும் நேற்றுப் பெரும் போராட்டம் நடத்தினர். இதனால் நாடாளுமன்றத்தினுள் பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

**நாடாளுமன்றம்**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வன உயிரிகள் சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம்.பி.க்கள் சபைக்குள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





இந்த விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் உரையாற்றிய பின்னரே பதாகைகளுடன் எழுந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்:, "பறிக்காதே பறிக்காதே காணிகளைப் பறிக்காதே', 'தமிழர் நிலங்களைப் பறிக்காதே" என கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், த.கலையரசன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் விசனமடைந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான சி.பி.ரத்நாயக்கவும், இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவும் ஆர்ப்பாட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரான அங்கஜன் இராமநாதனிடம் வலியுறுத்தினர். அவரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த முயன்றபோதும், அவர்கள் உரத்த குரலில் கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

ஜெனிவா அமர்வுக்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுக்கின்றனர் எனவும், தமிழ் மக்கள் மீது இவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது எனவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குற்றஞ்சாட்டினார். இதன்பின்னர் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சி.பி. ரத்நாயக்க மக்களுக்குச் சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்படாது என வழங்கிய உறுதிமொழியையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.

**ஜனாதிபதி செயலகம்**

இதேகோரிக்கையை முன்னிறுத்தி ஜனாதிபதி செயலகம் எதிரில் நேற்று மதியம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

'நிறுத்து நிறுத்து மகாவலி என்ற போர்வையில் தமிழரின் நிலங்களை அபகரிப்பதை நிறுத்து', 'தொல்பொருள் என்ற போர்வையில் தமிழரின் நிலங்களையும், கலாசாரத்தையும் அபகரிப்பதை நிறுத்து', 'நிறுத்து நிறுத்து வனஜீவராசிகள் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழரின் நிலங்களை அபகரிப்பதை நிறுத்து' போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏந்தியிருந்தனர்.

போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் செய்தியை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

இதன்போது குறித்த அதிகாரி, நில விவகாரம் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் பேசுமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் எனவும், அடுத்த வாரத்தில் ஜனாதிபதி, ஜனாதிபதி செயலாளர், அமைச்சர் சமல் ராஜபக்ச ஆகியோருடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்புக்கு அழைப்பார் எனவும் தெரிவித்தார்.

இதையடுத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது. (அ-ஒ-22)

## மசகு...

சர்வதேச சந்தையின் ஒரு பரல் மசகு எண்ணெய் விலை கடந்த ஜனவரி 31ஆம் திகதி 91.03 டொலருக்கு விற்பனையானது. தற்போது மசகு எண்ணெய் ஒரு பரல் 98 டொலரில் விற்பனையாகி வந்தது. இந்நிலையில், நேற்றைய போரைத் தொடர்ந்து மசகு எண்ணெயின் விலை பரல் ஒன்றுக்கு 100 அமெரிக்க டொலர் என்றளவில் உயர்ந்துள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் மசகு எண்ணெயின் விலை 100 அமெரிக்க டொலரைத் தொட்டுள்ளது. இதனால், உலகளவில் பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள் விலை உயரும் என்று கூறப்படுகிறது.

கொரோனா உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மசகு எண்ணெய் சந்தையில் மந்தமான நிலைமை தோன்றியிருந்தது. எண்ணெய் உற்பத்தி நாடுகள் விலையேற்றத்துக்காகக் காத்திருந்தன. தற்போது உக்ரைன் மீது தாக்குதல் தொடங்கியுள்ள நிலையில் இதனை வாய்ப்பாக சரியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது சர்வதேச மசகு எண்ணெய்ச் சந்தை. இது ஒரு பரலுக்கு 115 டொலர் வரை கூட உயர வாய்ப்பிருக்கிறது.

**தங்கம் விலை உயர்வு**

உக்ரைன் போர் காரணமாக இலங்கையில் தங்கத்தின் விலை ஒரே நாளில், 4 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளதென அகில இலங்கை ஆபரண வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில், ஆயிரத்து 871 டொலரில் இருந்து ஆயிரத்து 974 டொலராக தங்கத்தின் விலை அதிகரித்துள்ளதாக அந்த சங்கத்தின் பொருளாளர் ராமன் பாலசுப்ரமணியம் தெரிவித்தார். இதன் காரணமாக, இலங்கையில் 24 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 800 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. (அ-ஒ-இ)

## 22...

சந்தேகத்தில், 48 வயதான இலங்கையர் ஒருவரை பிரிட்டன் பெருநகரப் பொலிஸார் கைது செய்துள்ளனர். நோர்தாம்ப்டன்சையரில் கடந்த 22ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

'இந்த நடவடிக்கைகள் குறித்து நிமலராஜனின் குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்களைக் கொண்டிருக்கும் எவரிடமிருந்தும் தகவல்களை பெற அதிகாரிகள் ஆர்வமாக உள்ளனர் - குறிப்பாக இங்கிலாந்துக்கு புலம்பெயர்ந்து இப்போது வசிக்கும் இலங்கை சமூகத்தினரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்' என்று பிரிட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போர்க்குற்றங்களுக்கு எதிரான பயங்கரவாத எதிர்ப்புக் கட்டளைப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பிரிவு, இங்கிலாந்தின் அதிகார வரம்புக்குள் வரக்கூடிய மற்றும் உலகில் எங்காவது போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை அல்லது சித்திரவதை செய்ததாக சந்தேகிக்கப்படும் எவரையும் விசாரித்து நீதிக்கு கொண்டு வருவதற்கு உதவும். இத்தகைய விசாரணைகள் பெரும்பாலும் வெளிநாட்டில் செய்யப்பட வேண்டும் மற்றும் வெளிநாட்டிலிருந்து ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும், எனவே அவை மிகவும் சிக்கலானதாகவும் நீண்டதாகவும் இருக்கும்.

போர்க் குற்றங்கள் குறிப்பிடப்பட்ட அனைத்து போர்க் குற்றச் சாட்டுகளும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் பரிந்துரை வழிகாட்டுதல்களின்படி பரிசீலிக்கப்பட்டு, மதிப்பிடப்பட்டு கையாளப்படுகின்றன. போர்க் குற்றங்கள் குழு என்பது பிரித்தானிய போர்க் குற்ற வலையமைப்பின் ஒரு பகுதியாகும்.

போர்க் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பான புகலிடமாக இங்கிலாந்து இருக்காது என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலிடுவதற்கு இந்தியா தயார்

## ஜெய்சங்கர் தெரிவிப்பு



**கொழும்பு, பெப். 25**
**இலங்கையில் முதலீடு செய்வதற்கு இந்தியா தயாராகவுள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய் சங்கர் தெரிவித்துள்ளார்.**

இணையவழியூடாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார் என இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இலங்கையில் நிலவும் நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கு உதவும் நோக்கில் இந்தியா இந்த முடிவுக்கு வந்துள்ளது. இலங்கையில் கடுமையான அந்நியச் செலாவணி தட்டுப்பாடு ஏற்பட்டு, எரிபொருள் இறக்குமதிக்கு பணம் செலுத்த முடியாமல் கடந்த சில நாள்களாக பரவலாக மின்வெட்டு ஏற்பட்டுள்ளது என ஜெய்சங்கர் சுட்டிக்காட்டியுள்ளார் எனவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (வ-இ)

# வேலையை பறித்தது சீருடை

கொழும்பு, பெப். 25
கடமை நேரத்தில் உத்தியோக பூர்வ சீருடையை அணியாமைக்காக போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் இருந்து இடைநீக்கப்பட்டுள்ளார்.

போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உத்தியோகபூர்வச் சீருடையுடன் செருப்புகளை அணிந்து போக்குவரத்துக் கடமையில் ஈடுபடும் காணொலி ஒன்று வெளியாகியிருந்தது. போக்குவரத்து விதிமீறல் ஒன்றுக்காக மறிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர், இதைக் காணொலியாகப்பதிவுசெய்து வெளியிட்டிருந்தார். இந்தக் காணொலி பொலிஸ் திணைக்களத்தின் கவனத்துக்குச் சென்ற நிலையில், அந்த உத்தியோகத்தர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# சிறைச்சாலை முகாமைத்துவம்: வர்த்தமானி வெளியானது

கொழும்பு, பெப். 25
சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சை மறுசீரமைக்கும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல், நிறுவனங்கள் மற்றும் சட்டக் கட்டமைப்புக்களை விவரிக்கும் வகையில் அமைந்துள்ளது. (எ-இ)

# கொழும்பில் ஆடம்பர விடுதி

கொழும்பு, பெப். 25
இலங்கையின் முன்னணி வர்த்தக குழுமம் ஒன்று, கொழும்பில் 70 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆடம்பர விடுதியை நிர்மாணிக்கத் தீர்மானித்துள்ளது. இதற்காக அரசாங்கத்திடமிருந்து வரிச் சலுகைகளை எதிர்பார்த்துள்ளது.

இந்த விடுதி கொழும்பு 03இல் 652 அறைகளுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்காக 2008ஆம் ஆண்டு மூலோபாய அபிவிருத்தித் திட்ட சட்டத்தின் கீழ் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (வ-இ)

# மிகைவரிச் சட்ட வரைவு அரசமைப்புக்கு முரண்!

## உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு, பெப். 25
நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மிகை வரிச் சட்ட வரைவு அரமைப்புக்கு முரணானது என்று உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் இந்த மனுவைத் தாக்கல் செய்தது.

மிகை வரி என்ற தலைப்பிலான சட்டவரைவு கடந்த புதன்கிழமை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. சட்ட வரைவின் சரத்து 2(1)இன் படி, 2020ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி முதல் 2 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு அதிக வருமானம் பெறும் கூட்டு வர்த்தகம் அல்லது நிறுவனம் வருமானத்தில் 25 சதவீதத்தை அத்தகைய மதிப்பீட்டு ஆண்டுக்கு செலுத்த வேண்டும்.

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 2(1) மற்றும் சட்ட வரைவின் பிற தற்செயலான ஏற்பாடுகள் பிரிவுகளுடன் வாசிக்கப்பட்டால், மிகை வரிக்கு உட்பட்ட ஒரு நிறுவனத்தின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

இந்தச் சட்ட வரைவின் சரத்துகள் அரசமைப்பின் 3(1) பிரிவின்படி மக்களின் இறையாண்மையை மீறும். இந்தச் சட்ட வரைவுக்கு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு அனுமதிக்கு மேலதிகமாக மக்கள் வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியைப் பெற வேண்டும் என பிரகடனப்படுத்த வேண்டும் என்று, மனுதாரரான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மனுவில் கோரியுள்ளார். (எ-இ)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு அடிப்படைக்காரணம் ‘19’

## எஸ்.பி. கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 25
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துக்கு அடிப்படைக் காரணியாக அமைந்ததே அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டமாகும். எனவே, அந்தத்தாக்குதல் சம்பவத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே முழுமையாக பொறுப்புக்கூறவேண்டும் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

‘உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் லக் ஷ்மன் கிரியல்ல கருத்து வெளியிட்டார். பேராயர் முன்வைத்துள்ள விடயமொன்றையும் சுட்டிக்காட்டினார். உடன் பதில் வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

நாட்டில் நிலவிய பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துக்கு அடிப்படைக் காரணம் என்ன? அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டமாகும். ரணில் விக்கிரமசிங்கவை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன போன்று ஆக்கிவிட்டு, மைத்திரிபால சிறிசேனவை அதிகாரமற்ற அதாவது பெயரளவிலான ஜனாதிபதியாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 19ஆவது திருத்தச் சட்டத்தின் உண்மையான நோக்கம் இதுவே.

எனினும், உயர்நீதிமன்றத்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரங்கள் ஓரளவு பாதுகாக்கப்பட்டன. இதனையடுத்து ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் சர்ச்சைகள் மூண்டன. அதனால் பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் உட்பட பாதுகாப்பு தரப்பினர் இரண்டாக பிளவுபட்டனர். தேசிய பாதுகாப்புச் சபைக்கூட்டம் முறையாக நடைபெறவில்லை.

நியூஸிலாந்தில் முஸ்லிம்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குப் பின்னர், காஷ்மீர் எல்லை அல்லது ஆப்கானிஸ்தானின் காபூலிலுள்ள அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் நடத்தவே ஐ.எஸ். பயங்கரவாதிகள் திட்டம் தீட்டினர். எனினும், இலங்கையில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவியதால், அதனை சாதகமாக்கிக்கொண்டு, இங்கு தாக்குதல் நடத்தப்பட்டு, நாடு சுடுகாடாக்கப்பட்டது. இதற்கு நல்லாட்சிதான் பொறுப்பு. ரணிலை அதிகாரம் மிக்கவராக மாற்றப்போய்த்தான் இவ்வாறான நிலை ஏற்பட்டது. எனவே, அவர்தான் முழுமையாக பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (ம-44)

போட்டிப்பரீட்சை
நேரடி
வகுப்புக்கள்
பிரதி சனி நடைபெறும்
ஆரம்பம் - சனி (26/2)
9.00am-2.00pm
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ் ஆஸ்பத்திரி வீதி
கொமர்ஷல்
வங்கியருகில்
தவசேகர் வளவாளர்குழு
SLIRS, SLEAS,SLAS,
SLPS,SLAcS,SLAgr
LL.B,GS,MSQ,Teaching
சகல பரீட்சைகளுக்குமான
வினாத்தாள்களுக்கும்
சகல
விபரங்களுக்கும்
T.P/ whatsapp
076 688 3394
(CS 18517) (4/6)

வேலையாள் தேவை
Cat JCP இயந்திரத்திற்கு
லைசன்ஸ் உள்ள Driver
தேவை.
077 353 3809, 077 373 5338

வேலையாள் தேவை
• Sales Rep (ஆண்) • Bill Clerk (பெண்)
• Office Staff (பெண்)
Join us to be a part of the caring our team
021 225 1244, 077 073 3862

மணமகள் தேவை
1991ஆம் ஆண்டு பிறந்த உரும்பிராயைச் சேர்ந்த சுயதொழில் புரியும் வெளிநாடு செல்லவிருக்கும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
(CS 18477) (3/6) 074 166 9936

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் பலாலி வீதி, புன்னாலைகட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் காணி 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம் வாகையடி சந்தி 074 269 0854
(CS 18511) (4/6)

வீட்டுடன் காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி அம்மன் கோயிலடியில் 4 பரப்புக்காணி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
A-32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை
தரகர் தேவையில்லை
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 241 7589
(CS 18510) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.